Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 30, 2024

புதன்கிழமை ஒக்டோபர் 30, 2024 | ஒளி: 10 கதிர்: 082 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



### உள்நாட்டு, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களின்

# “பாதுகாப்புக்கு பங்கமில்லை”


### விஜித ஹேரத் தெரிவிப்பு; அநுரவின் கையொப்பம் எங்கே என கேட்கிறார்

உள்நாட்டை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்கும் எவ்விதமான பங்கமும் ஏற்படாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத், தகவல்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார். இந்தியாவில் இருந்து வரும் விமானங்களில் வெடிபொருள் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி, கட்டுநாயக்கவில் தரையிறக்கப்படுகின்றன. அவை புரளிகள் என்பது இனங்காணப்பட்டுள்ளது என்றாலும், பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

தொடர்ச்சி P2

### HPV தடுப்பூசி ஏற்றிக்கொண்ட

# 4 மாணவிகள் மயங்கினர்




கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட வாதுவ பாடசாலை ஒன்றின் நான்கு மாணவிகள், செவ்வாய்க்கிழமை (29) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுமிகளான மாணவிகள் 11-12 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நான்கு மாணவிகளுக்கும் வாந்தி, சுவாசிப்பதில் சிரமம் உள்ளிட்ட அறிகுறிகள் காணப்பட்டதாக வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



# “வீராப்பு பேசியவர் மண்டியிடுகிறார்”

தற்போது எமது நாடு மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் நாட்டு மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கினார். எனினும், தற்போது மண்டியிடுகின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வரிச் சுமை குறையும் என நாடு காத்திருந்து. சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) பேச்சுவார்த்தைக்குப் பின், வரி குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது, ஆனால், அது நடக்கவில்லை. வற், நேரடி மற்றும் மறைமுக வரிகளைக் குறைக்க முடியாது போயுள்ளது.

அனுரகுமார திசாநாயக்க, தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளையும் அவரால் நிறைவேற்ற முடியாது போயுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2



# சாவகச்சேரிக்கும் தாக்குதல் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில், செவ்வாய்க்கிழமை (29) காலை முதல் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்துக்குத் தாக்குதல் நடத்தப்படப்போவதாக பொலிஸாரின் தொலைபேசிக்கு வழங்கப்பட்ட மர்ம நபரின் தகவலுக்கமைய குறித்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து கடும் சோதனைகளுக்குப் பின்னரே நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்கப் பொதுமக்களுக்கு அனுமதிக்கப்பட்டனர்.



# வெள்ளை மாளிகையில் தீபாவளி கொண்டாட்டம்

அமெரிக்கா வெள்ளை மாளிகையில், தீபாவளி கொண்டாட்டங்கள் திங்கட்கிழமை (28), நடைபெற்றன. ஜனாதிபதி ஜோ பைடன் குத்துவிளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

அதன்பின்னர், தனது தீபாவளி வாழ்த்தையும் ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தர். தீபாவளியை, வெள்ளை மாளிகை பெருமையுடன் கொண்டாடியது.

மேலும், “அமெரிக்காவில் உள்ள தெற்கு, ஆசிய சமூகம் அமெரிக்காவின் மேம்பாட்டுக்கு அதிக பங்காற்றியுள்ளது. உலகத்திலேயே மிகவும் வேகமாக வளரும் சமூகமாக இது உள்ளது.

பன்முகத்தன்மை வாய்ந்த அமெரிக்கா தற்போதுள்ள நிலைமைக்கு எப்படி வந்தது என்பதை ஒருபோதும் மறக்காது” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரணிலை பிரதிவாதியாக்க உயர்நீதிமன்றம் அனுமதி



பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமித்தமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பிரதிவாதியாக சேர்க்க, மனுதாரர்களுக்கு உயர் நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை(29)அனுமதி வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

# “இந்த சவால்கள் நகத்தின் நுனியில் உள்ள தூசிகள்”



பதிவு செய்யப்படாத காரைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எழுதியதாக இணையத்தளம் ஒன்றில் வெளியாகியுள்ள கடிதம் போலியான கடிதம் என சிறைச்சாலை ஆணையாளர் (ஊடகப் பேச்சாளர்) காமினி பி.திசாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### தீவில் பன்றிக்காய்ச்சல்

# அபாயம்

தீவின் அனைத்து பிரதேச செயலகங்களையும் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் (AFS) மற்றும் இனப்பெருக்கம் மற்றும் சுவாசம் மற்றும் சிறப்பியல்பு நோய் (PRRS) மற்றும் பன்றிகளை

தொடர்ச்சி P2



# கள்ளக்காதலியை தள்ளிவிட்ட கள்ளக்காதலன் கைது

தன்னுடைய கள்ளக்காதலியை பஸ்ஸில் இருந்து கீழே தள்ளிவிட்டதாகக் கூறப்படும் அந்த பெண்ணின் கள்ளக்காதலனை, செவ்வாய்க்கிழமை (29) கைது செய்துள்ளதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் வெலிகந்த, சிங்கபுர பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடைய திருமணமானவர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவருடைய காதலி என கூறப்படும் பலுகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த பெண், காயமடைந்த நிலையில் தம்புள்ளை ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த காதலர்கள் இருவரும் பொலன்னறுவையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் பொலன்னறுவையில் இருந்து ஏறியதாகவும், பஸ்ஸில் ஏறியதில் இருந்து இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# இருவருக்கும் 90 நாட்கள் தடுப்பு காவல் உத்தரவு



வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் வேண்டுகோளுக்கு இணங்க, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நடமாடும் பகுதிகளை இலக்கு வைத்து இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாக சந்தேகிக்கப்படும் மேலும் இரு சந்தேகநபர்கள், பாதுகாப்பு அமைச்சர் என்றவகையில், ஜனாதிபதியின் உத்தரவின்படி,

90 நாட்களுக்குத் தடுத்து வைக்கப்படுவார்கள் என்று பயங்கரவாத தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (29) எடுக்கப்பட்ட போதே குறித்த பிரிவு, நீதிமன்றத்துக்கு குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரகாரம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளைத் தொடர்வதற்கு அனுமதி வழங்குமாறும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் விசேட மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## “இந்த சவால்கள் நகத்தின் நுனியில் உள்ள தூசிகள்”

சிறைச்சாலையில் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கடிதம் ஒன்றை வெளியிட்டுள்ளார் எனவும், சந்தேகநபர் அல்லது சிறைச்சாலையிலுள்ள கைதிகள் ஏதேனும் கடிதத்தை வெளியில் அனுப்பினால் அதனை அந்தந்த சிறைச்சாலை அத்தியட்சகரின் பூரண கண்காணிப்பின் கீழ் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் அனுமதியுடன் இந்த கடிதம் வெளியானது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எழுத்து மூலம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து குருநாகல் பிரதேசத்தில் தனது கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு எழுதியதாகக்கூறபடும் கடிதமொன்று சமூக வலைத்தளங்களில் தரவேற்றப்பட்டுள்ளது.

2024 தேர்தலுக்காக உங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் இப்படி இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கவே இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் 2015 மற்றும் இன்று போல் அரசியல் ரீதியாக வெல்ல முடியாத பாத்திரங்களை அவதூறுகளின் அடிப்படையில் செயலிழக்கச் செய்து, அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களைச் சிறையில் அடைத்து அல்லது அடக்கி ஆளாக்கித் தங்கள் அரசியல் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயலும் சந்தர்ப்பவாதிகள் விளையாடத் தொடங்கியுள்ளனர்.

இன்றும் அன்றும் உள்ள ஒரே வித்தியாசம் என்னவென்றால், அந்த இளைஞன் ஜனாதிபதி நாற்காலியிலிருந்து அதை வழிநடத்துவதுதான், நான் நம்பும் அரசியலுக்கு, இந்த சவால்கள் நகத்தின் நுனியில் உள்ள தூசியைத் தவிர வேறில்லை.

இந்நாட்டு மக்களுக்காக, குருநாகல் மக்களின் முன்னேற்றத்திற்காக, நான் நம்பும் தத்துவத்தின் பக்கம் நிற்பது தவறு, நான் பிறந்த வீட்டைக் கூட, என் பெற்றோர் கட்டியெழுப்ப நினைப்பது கேலிக்குரியது.

அன்பும் நம்பிக்கையும் நெருக்கமும் நிரம்பிய இலட்சக்கணக்கான மக்களுக்கு நான் பிறந்த வீடும் அலுவலகமும் வெறுப்பும் பாசாங்குத்தனமும் கொண்ட ஒருசிலரால் எரிக்கப்பட்டன.. மக்களின் அன்பான நம்பிக்கை உங்களுக்கு இருக்கும் வரை, என்னைப் போன்றவர்களை வீழ்த்த முடியாது என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டும்

குருநாகல் மக்களின் அன்பினாலும் நம்பிக்கையினாலும் பலப்படுத்தப்பட்ட எனது அரசியலை ஒரு முற்றுப்புள்ளி வைப்பது என்பது அசைக்க முடியாது என்பதை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் வந்துள்ளது.

உங்களைப் போன்றவர்களின் அர்ப்பணிப்பினால் எனது முப்பது வருட அரசியல் பயணம் எப்போதும் வலுப்பெற்றுள்ளது.

கஹபட்வல மற்றும் தம்பதெனிய போன்ற கிராமிய சுகாதார நிலையங்களின் விளையாட்டு மைதானங்கள். உட்புற விளையாட்டு இல்லங்கள் முதல் தரைவிரிப்பு சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் வரை, உங்கள் அன்பின் பழங்கள் கொட்டிக்கிடக்கின்றன.

அந்த நெருக்கம் நிகவெரட்டியவில் வெகுதொலைவில் உள்ள ஒரு வீட்டில் குப்பி விளக்கை ஏற்றிய மின்விளக்கிலிருந்து குருநாகல் ஏரி வட்டம் படகமுவ மற்றும் படலகொட ரிசர்வ் நடைபாதை வரை நீண்டிருந்தது.

அந்த அர்ப்பணிப்பும், வலிமையும், அன்பும், நெருக்கமும் எனக்கு முன்பைவிட அதிகமாக வந்துள்ளது,

எதிரணியினர் எழுப்பும் அநாகரீகமான அவதூறுகளையும், பொய்க் குற்றச்சாட்டுகளையும் தடுக்கவே நான் உழைத்துள்ளேன் என்பதை, நமது அரசியலுக்காக நான் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார் நம்பிக்கை எங்கள் உறுப்பினர்களுக்கு அறிவிக்கவும்.

இந்த நாட்டைக் காப்பாற்றிய மஹிந்த ராஜபக்ச என்ற தலைவரிடம் உள்ள மரியாதையும், அன்பும் தான், நாமல் ராஜபக்ஷ தலைமையிலான பொது முன்னணியையும், எங்கள் கட்சியினரையும் பாதுகாப்பீர்கள் என்று சொல்லுங்கள் என் கடைசி மூச்சு வரை உத்தரவாதத்தை நிரூபித்து காட்டுங்கள் என்றார்.

# “பாதுகாப்புக்கு பங்கமில்லை”

அறுகம்பே விவகாரம் தொடர்பில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், எனக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவித்திருந்தார். அதன்பின்னரே, எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனினும், பயணத்தடை எவையும் விதிக்கப்படவில்லை. இவை தொடர்பில் பாதுகாப்பு பேரவை கலந்துரையாடி தீர்மானம் எடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை(29) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், அறுகம்பேயில் தீவிரவாத தாக்குதல்கள் மேற்கொள்ளப்போவது தொடர்பில் கிடைத்த தகவல்களை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கைக்கு வருகைதரும் இஸ்ரேலிய பிரஜைகளுக்கு விசேட பாதுகாப்பு தேவைப்படும் பட்சத்தில் அவை வழங்கப்படும். இஸ்ரேலிய பிரஜைகளுக்கு மட்டுமன்றி, ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் அவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படும். இலங்கைக்கு ஏனைய நாடுகளில் இருந்து சுற்றுலாப்பயணிகள் மட்டுமே வருகைதருவதில்லை. இராஜதந்திர, அதிகார மட்டத்தில் இருப்பவர்களும் வருகைதருவார்கள். அவ்வாறானவர்கள் இங்கு பணியாற்றுகின்றனர்.

அறுகம்பேயில் தாக்குதல் நடத்தப்படப்போவதாக உள்நாட்டுப் புலனாய்வுத்துறையினருக்கும், வெளிநாட்டுப் புலனாய்வு சேவைக்கும் கிடைத்த தகவல்களை அடுத்து, பாதுகாப்பு பேரவை கூடி, கலந்துரையாடிப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. ஆகையால், உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரஜைகளின் பாதுகாப்புக்கு எவ்விதமான பங்கமும் ஏற்படாது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனினும், அச்சட்டம் நீக்கப்படவேண்டும் என பல காலமாகப் பேசப்பட்டுவருகின்றது. அந்த சட்டத்தை மாற்றவேண்டும் என்பது தொடர்பில் கலந்துரையாடப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எமது அரசாங்கத்தின் பிறநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினர். எனினும், அந்த நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் எவ்விதமான கலந்துரையாடல்களிலும் ஈடுபடவில்லை.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையிலான அரசாங்கம் எந்த நாட்டில் இருந்தும், எந்தவொரு வெளிநாட்டு நிறுவனத்திடம் இருந்தும் கடன் பெறவில்லை.

அத்துடன், உள்நாட்டில் பணத்தையும் அச்சடிக்கவில்லை. அப்படியாயின், தற்போதைய ஜனாதிபதியே நிதியமைச்சராக இருக்கின்றார். அவரது கையொப்பத்தில், நாணயத்தாள்கள் வெளிவந்திருக்கவேண்டும். அந்த தாள்கள் எங்கே போனது?

நிதியமைச்சரான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் கையொப்பத்தில், புதிய நாணயத் தாள்களை பார்ப்பதற்கு தங்களுக்கும் ஆசையாக இருக்கிறது எனத் தெரிவித்த அமைச்சர் விஜித ஹேரத், புதிய நாணயத் தாள்கள் அச்சடிக்கப்பட்டமை என்பது பொய்யாகும் என்றார்.

## “வீராப்பு பேசிவர்...

ஐக்கிய மக்கள் சக்தியின் தெமடகொட கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று தெமடகொட பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஜனக நந்த குமாரவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் தேர்தல் மேடையில் பெரும் வீராப்பாகப் பேசினாலும், சர்வதேச நாணய நிதியத்தின் முன் மண்டியிட வேண்டி ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த மீளாய்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின், வரிச் சுமையை குறைக்க வேண்டுமாயின், முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தைத் திருத்த வேண்டுமாயின், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

அத்துடன், எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தி, மக்கள் ஆணை கிடைத்தால் இந்த ஒப்பந்தத்தில் திருத்தம் செய்வதாகக் கூறியது. அதை ஏற்று மக்களை நிர்க்கதிக்கு ஆளாக்கும் திட்டத்தை நீக்குவதாக உறுதியளித்தனர். எனவே தான் இந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தை வழங்குமாறு கோரிக்கை விடுக்கிறோம். இதன் ஊடாக சர்வதேச நாணய நிதியத்தின் புதிய உடன்படிக்கையை எட்ட முடியும் எனவும் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

## ரணிலை பிரதிவாதியாக்க உயர்நீதிமன்றம் அனுமதி

தேசபந்து தென்னகோனை, பொலிஸ் மா அதிபராக நியமித்தமைக்கு எதிராக இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாலிய பீரிஸ், உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், முன்னாள் ஜனாதிபதி விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி வகிக்காத காரணத்தினால், அவரை பிரதிவாதியாக இணைத்து மனுவின் தலைப்பில் திருத்தம் செய்ய நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரியுள்ளார்.

இந்த மனுவில் முன்னாள் ஜனாதிபதியைப் பிரதிவாதியாகச் சேர்க்க மனுதாரர்களுக்கு நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு அனுமதி வழங்கியுள்ளது.

## இருவருக்கும் 90 நாட்கள் தடுப்பு காவல் உத்தரவு

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலர் தங்கியிருப்பதாகக் கூறப்படும் சுற்றுலாப் பிரதேசத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இருந்ததாகக் கூறப்படும் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணை தொடர்பான வழக்கில் விசேட பிரேரணையைத் தாக்கல் செய்து நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவர், தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பயங்கரவாத விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணை தொடர்பான மேலதிக அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் சமர்ப்பிக்கப்பட்ட உண்மைகள் மற்றும் விசேட அறிக்கையைப் பரிசீலித்த மேலதிக நீதவான், விசாரணையின் முன்னேற்றம் குறித்து நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு உத்தரவிட்டு விசாரணைக் கோப்பை முடித்து வைத்தார்.

## தீவில் பன்றிக்காய்ச்சல்...

இந்த நோயின் அவதானமான விலங்குகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நோய் அபாயம் குறித்து சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகம், சந்திரிகா ஹேமலி ஆபரத்ன கொத்தலாவலவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 25ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தலில், பன்றிக்காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, அனைத்து ஆபத்தான மற்றும் பாதிக்கப்பட்ட பன்றிகளைப் படுகொலை செய்தல், பன்றி இறைச்சி தொடர்பான பொருட்கள், நோய்த் தொற்று உள்ள பகுதிகளுக்குள் அல்லது வெளியே நோய்க் கிருமிகளைக் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல், ஆபத்தான பன்றிகளைச் செயற்கையாக இனப்பெருக்கம் செய்தல், நேரடி விலங்கு வர்த்தகம், போட்டிகள் நடத்துதல், பன்றிகள் விற்பனை மற்றும் விற்பனை செய்தல், பன்றி இறைச்சிப் பொருட்கள், நோய்க்கிருமிகள் பொருட்கள் சேமிப்பு நோய்வாய்ப்பட்ட விலங்குகளை நீர் சம்பந்தப்பட்ட இடங்களில் வைப்பதோ அல்லது வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த தடை செய்யப்பட்ட செயல்களைத் தடுக்க சுகாதார அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## திருடிய பணிப்பெண் கைது

கொலம்பிய விமானி ஒருவரின் பயணப்பொதிகளை திருடிய 45 வயதுடைய இலங்கை வீட்டுப் பணிப்பெண் ஒருவர் விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட பொருட்கள் 40 வயதான கொலம்பிய விமானிக்குச் சொந்தமானது. வத்தளை, ஹுனுப்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் வீட்டுப் பணிப்பெண், எதிஹாட் எயார்வேஸ் விமானத்தில் அபுதாபியிலிருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை, செவ்வாய்க்கிழமை (29) காலை 8:38 மணியளவில் வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் தரையிறங்கிய பிறகு, பயணிகள் அனைவரும் இறங்கிய பிறகு விமானி மற்றும் விமான ஊழியர்கள் விமானத்தை விட்டு வெளியேறினர். அவர்கள் தங்கள் பொருட்களைச் சேகரித்து விமான நிலையத்திலிருந்து புறப்படத் தயாரானபோது, பைலட் தனது பையைக் காணாமல் போனதைக் கண்டுபிடித்தார்.

இந்த சம்பவம் எதிஹாட் எயார்லைன்ஸ் மேலாளருக்குத் தெரிவிக்கப்பட்டது, மேலும் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் சி.சி.ரி.வி. காட்சிகளை ஆய்வு செய்தனர். முதலில் இறங்கியவர்களில் ஒரு பெண், விமானியின் சாமான்களை எடுத்துக்கொண்டு, விமான நிலையத்தின் மற்றொரு பகுதிக்குச் செல்வதும், தனது சொந்த சாமான்களை ஏற்றிச் செல்லும் டிராலியில் பையை மறைத்து வைப்பதும் கெமராக்களில் பதிவாகியுள்ளது.

மேலும் கமெரா காட்சிகளை ஆய்வு செய்ததில் குறித்த பெண் விமான நிலையத்தை விட்டு அவசரமாக முச்சக்கர வண்டியில் ஏறிச் செல்வது தெரியவந்துள்ளது.

அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, வத்தளை ஹுனுப்பிட்டியவில் உள்ள வீட்டுப் பணிப்பெண்ணின் வீட்டிற்குச் சென்ற அவர், திருடப்பட்ட பையுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட வீட்டுப் பணிப்பெண் மற்றும் திருடப்பட்ட பயணப் பொதிகளுடன் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## மாணவர் தலைவர்களை அச்சுறுத்திய வேட்பாளர்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, ஓட்டமாவடி மத்திய கல்லூரியில் அத்துமீறி உள் நுழைய முற்பட்ட ஒருவரை, தடுத்து நிறுத்திய பாதுகாப்பு உத்தியோகத்தர், மாணவர் தலைவர்களைத் தகாத வார்த்தை பிரயோகித்து ஏசியமை மற்றும் பாடசாலை நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் விடுத்த, வேட்பாளர் ஒருவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்திலும், உதவி-தேர்தல் ஆணையாளர் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பிலும் பாடசாலையின் அதிபர் சனிக்கிழமை (26) முறைப்பாடு செய்துள்ளார்.

பாடசாலை ஆரம்பிக்கும் போது தேசிய கீதம் மற்றும் காலை கூட்டம் இடம்பெறும் அப்போது பிந்தி வரும் மாணவர்களைக் காலைக்கூட்டம் முடியும் வரை நிறுத்தி வைப்பது வழமையானதாகும்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை(25) காலை பாடசாலை ஆரம்பித்து காலைக் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது குறித்த வேட்பாளர் அவரது பிள்ளையை பாடசாலைக்கு கொண்டு சென்றுள்ள நிலையில், அங்கு பிந்தி வந்த மாணவர்களை நிறுத்தி வைக்கப்பட்டிருந்துள்ளது.

இதன் போது பிந்திச் சென்ற அவரது பிள்ளை பாடசாலைக்குள் செல்ல வேண்டும் என பாடசாலை வளாகத்தினுள் அத்துமீறி உள் நுழைய முற்பட்ட போது, அவரை தடுத்து நிறுத்திய பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் மாணவர் தலைவர்களை தகாத வார்த்தை பிரயோகித்து தான் கட்சி ஒன்றின் வேட்பாளர் என தெரிவித்து அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்த, உலக்கை றபீக் என அழைக்கப்படும் வேட்பாளருக்கு எதிராக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலும் மாவட்ட தேர்தல் உதவி ஆணையர் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பிலும் குறித்த பாடசாலை அதிபர் முறைப்பாடு செய்துள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்துக்குள்ளான லொகான் ரத்வத்தையின் வாகனத்தை

# "படம் பிடித்தவரை மிரட்டியது பிழை"

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தையின் வாகனம் விபத்தில் சிக்கிய வேளை அதனைப் படம்பிடித்த நபருக்கு எதிராக பொலிஸார் செயற்பட்ட விதம் குறித்து அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (29) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் விபத்துக்குள்ளான வாகனத்தில் ஆயுதங்கள் காணப்பட்டதால் பொதுமக்கள் அதனைப் படமெடுத்தார்கள் என குறிப்பிட்டுள்ளார்.



அனைவரையும் 7ஆம் திகதி திகதிக்குள் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. அனுமதிப்பத்திரம் உள்ளவர்களிற்கும் இந்த வேண்டுகோள் பொருந்தும் என தெரிவித்துள்ள அமைச்சர், சிலர் ஆயுதங்களை மீள ஒப்படைக்கவில்லை அவ்வாறான ஆயுதங்களை பொது இடத்தில் காணும்போது மக்கள் குரல் எழுப்புவதைத் தவிர்க்க முடியாது என்றார்.

அத்துடன், அந்த இடத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் செயற்பட்ட விதத்தினை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ள அமைச்சர் அந்த பொலிஸ் உத்தியோகத்தர் வீடியோ எடுத்த நபரை மிரட்டினார். அது தவறு, அவர் அப்படிச் செய்ய முடியாது, எவருக்கும் வீடியோ எடுப்பதற்கான உரிமையுள்ளது என தெரிவித்துள்ளார் அத்துடன், சம்பவம் இடம்பெற்ற இடம் உயர் பாதுகாப்பு வலயம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# பிள்ளைகளுக்காக பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

க.அகரன்

வவுனியா, ஆசியரியர்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யக்கோரி பாடசாலை வாயிலின் முன்பாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களினால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

செட்டிக்குளம், அரசடிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் 03ம் வகுப்புக்கான ஆசிரியரை கடந்த 10 மாதங்களாக நியமிக்கப்படாமையால் மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளதாகத் தெரிவித்து பெற்றோர்கள் மற்றும் மாணவர்களினால் பாடசாலை வாயிலிற்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுமார் இரண்டு மணித்தியாலங்களாகியும் தீர்வு கிடைக்காத நிலையில், தமக்கான தீர்வாகக் குறித்த வகுப்பிற்கான நிரந்தர ஆசிரியரினை நியமிக்கும் வரை தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்தனர்.




# 20 அடி பள்ளத்தில் பாய்ந்தது கார்

## நான்கு பேர் தப்பினர்

கொழும்பில் இருந்து ஹட்டன் நோக்கி அதிவேகமாகப் பயணித்த கார் ஒன்று செவ்வாய்க்கிழமை(29) அதிகாலை 2 மணியளவில் ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் செனன் பகுதியில் வைத்து வீதியை விட்டு விலகி, 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்கு உள்ளானதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பிரதான வீதியில் வட்டவளையில் இருந்து ஹட்டன் வரையில் காலை வேளையில் கடும் பனிப்பொழிவு காணப்பட்டதாகவும், காரின் சாரதி வீதியைச் சரியாக அவதானிக்காமையால், கார் வீதியை விட்டு விலகிச் சென்றுள்ளதாகவும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஹட்டன் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கார் விபத்துக்குள்ளானதில் காரில் நான்கு பேர் பயணித்ததாகவும், விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.



# மின்னல் தாக்கி குடும்பஸ்தர் மரணம்



பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காயான்குடா வயல் பிரதேசத்தில் திங்கட்கிழமை (28) மாலை ஏற்பட்ட மின்னலை அடுத்து விழுந்த இடி தாக்குதலில் கூலித் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு சத்துரகொண்டான் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குடும்பஸ்தர் காயன்குடா வயலில் வரம்பு கட்டிக் கொண்டிருந்த போது மழை பெய்யாத சமயம் திடீரென ஏற்பட்ட இடிமின்னலில் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நசீர் கரடியனாறு பொலிஸாருடன் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உடல் கூறு பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# கரை ஒதுங்கும் ஊம்பல் மீன்கள்

ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி கடற்கரையில் திங்கட்கிழமை (28) இரவு முதல் பெருமளவிலான சிறிய ஊம்பல் மீன்கள் கரை ஒதுங்கிக் கொண்டிருக்கிறது.

கடந்த பத்து அல்லது பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் சிறிய ஊம்பல் மீன்கள் கரை ஒதுங்குவதாக மீனவர்களும் பொது மக்களும் தெரிவிக்கின்றனர்.

காலநிலை மாற்றம் மற்றும் கடலில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றம் காரணமாக இந்த சிறிய ஊம்பல் மீன் கரை ஒதுங்குவதாகவும் மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.



# 63 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

எம்.எஸ்.எம்.ஹனீபா

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 63 நபர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.முகம்மது இஸ்ஸதீன் செவ்வாய்க்கிழமை (29) தெரிவித்துள்ளார்.

விசேட டெங்கொழிப்பு கட்டுப்பாட்டு வாரத்தினை முன்னிட்டு ஒலுவில், அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங்களில் டெங்கொழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

டெங்கொழிப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது சுமார் 1100 இடங்கள் பரிசோதனை செய்யப்பட்டதாகவும் இதில் 230 இடங்கள் துப்புரவு செய்யப்பட்டதாகவும், 167 இடங்கள் டெங்கு நுளம்பு பரவ கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், டெங்கு நுளம்பு பரவ கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு ஒரு வாரக் காலத்திற்குள் துப்பரவு செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் தற்போது பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் பொது மக்கள் டெங்கு நுளம்பு உருவாகாமல் தடுப்பதற்குச் சுற்றுப் புறச் சூழலை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.







# தேசிய வாசிப்பு மாதத்தில்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, திருகோணமலை அன்பின் பாதையின் 'எண்ணம் போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றத்தினரால் மாபெரும் பேச்சு போட்டி ஞாயிற்றுக்கிழமை (27) காலை 8.30 மணி தொடக்கம் 3.00 மணி வரை நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில், 220க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டு, தனது பேச்சாற்றலை வெளிப்படுத்தினார்கள். மூன்று பிரிவுகளாக நடைபெற்ற இப் போட்டியில் வெற்றிபெற்ற 30 மாணவர்களுக்குப் புத்தகப் பைகளும் கதைப் புத்தகம் மற்றும் சான்றிதழ் உட்பட முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பணப் பரிசும் வழங்கப்பட்டது.

மேலும், தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'நூல் கொண்டு நிமிர்' எனும் தொனிப் பொருளில் மாணவர்களின் வாசிப்பு மேம்படுத்தும் நோக்கிலான செயலமர்வானது பத்துப் பாடசாலைகளில் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தால் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.













# இலங்கை தமிழர்கள் மற்றும் ரசிகர்களை மறந்த விஜய்

தமிழக வெற்றிக் கழகத்தின் முதலாவது அரசியல் மாநாடு, விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலையில், ஞாயிற்றுக்கிழமை (27) மிக பிரமாண்டமான முறையில் நடத்தி முடிக்கப்பட்டது. தமிழக அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, இந்தியக் கட்சிகளும், ஏன்? உலகவாழ் தமிழர்களும் மூக்கில் கையை வைத்துப் பார்க்கும் அளவுக்குக் கனகச்சிதமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. விமர்சனங்கள், குறைபாடுகள், சிறுசிறு சம்பவங்களைத் தவிர்க்கமுடியாதவை. எனினும், 2026ஆம் ஆண்டை நோக்கி, தமிழக வெற்றிக் கழகம் அடி எடுத்து வைத்துள்ளது.

நடிகர் விஜய், தலைமையிலான இந்த வெற்றிக் கழகத்தின் மாநாட்டை உலக வாழ் மக்களும் அவதானித்துக்கொண்டிருந்தனர். முதலாவது அரசியல் மேடையில் பேசியவற்றை, தேர்தல்களுக்குப் பிந்திய காலங்களிலும் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்படுமாயின், தமிழகத்தின் வளர்ச்சி எங்கோ? சென்றுவிடும். ஏன்? மத்திய அரசாங்கத்துக்கு சவால் விடும் வகையில், இந்த வெற்றிக் கழகத்தின் பயணம் அமையும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தமிழக வெற்றிக் கழகத்தின் முதலாவது அரசியல் மாநாட்டைத் தொடர்ந்து, தமிழக கட்சிகள், கருத்துகளை முன்வைத்துள்ளன. தங்களுடன் கூட்டு அரசியலைச் செய்வதற்கான ஆதரவு கரங்களையும் நீட்டியுள்ளன. வாழ்த்து தெரிவித்துள்ளன. அத்துடன், பலதரப்பட்ட விமர்சனங்களையும் முன்வைத்துள்ளன. அவற்றுக்கெல்லாம் பதிலளிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அரசியலில் இறங்கிவிட்டால், எதனையும் தட்டிக்கழித்துவிட்டு முன்னோக்கிப் பயணிக்கவே முடியாது.

நடிகர் விஜய், அரசியல்வாதியாகி விட்டார். அவர் நடிகராக இருந்தபோது, இந்தியாவில் மட்டுமன்றி, தமிழ்பேசும், தமிழ்மொழியை விளங்கிக்கொள்ளும் ஏனைய மொழிகளைப் பேசும் ரசிகர்கள் உலகளாவிய இருந்தார்கள். இலங்கையிலும், விஜய் இரசிகர்கள் உள்ளனர். விஜய் இரசிகர்கள் அல்லாதவர்களும் அவருடைய அரசியல் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர். எனினும், அவரது முதலாவது பேச்சில், இலங்கையைப் பற்றி எதனையும் குறிப்பிடவில்லை. எதிர்காலங்களில் ஏதாவது கூறுவாரா? என்பதற்கு எதிர்காலமே பதில்சொல்லும்.

தமிழகத்துடன் இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களுக்குத் தொப்புள்கொடி உறவு இருக்கிறது. பிராந்திய அரசியலில், தமிழக-இலங்கை அரசியலுக்கு ஒரு தொடர்பு இருக்கிறது. இருநாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் ஒவ்வொரு நாளும் விஸ்வரூபம் எடுத்துவருகின்றன. இவை தொடர்பில், ஏதாவது கூறியிருந்தால், இலங்கையில் இருப்பவர்களும், தங்களுக்கு வாக்குரிமை இல்லாவிட்டாலும், இந்தியாவில் அகதிமுகாம்களில் வாழும், இலங்கையர்களும் பெருமைப்பட்டிருப்பார்கள்.

தமிழகத்தின் அடுத்த முதலமைச்சர் என பலரும் கூறுகின்ற நிலையில், பிராந்திய அரசியல் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும், தனது முதலாவது அரசியல் பேச்சு, விஜய் தொட்டு சென்றிருக்கலாம். அதேவேளையில், "அரசியல் பயணத்தை, விமர்சித்தவர்கள். இனி இன்னும் கடுமையாக விமர்சிப்பார்கள். அத்தகைய விமர்சனங்களில் ஏதேனும் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் தெரிந்தால், அவற்றை மட்டுமே கருத்தில் கொள்வோம். 2026இல் நம் இலக்கை அடைவோம். வெற்றி நிச்சயம்" என கூறியிருக்கிறார். ஆக, அவருடைய தெளிவான அரசியல் பயணத்துக்கு நாமும் வாழ்த்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# அரசியல் களத்தில் பந்தாடப்படும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்



எம்.எஸ்.எம்.ஐயூப்

கடந்த மார்ச் 22ஆம் திகதி கண்டியில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியையடுத்து, ஊடகவியலாளரகளுடன் உரையாடிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞயிறு தினத்தில் கிறிஸ்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரியை தமக்குத் தெரியும் என்றும் அதிகாரிகள் தன்னிடம் இது தொடர்பாக விசாரித்தால் அத்தகவல்களை அவர்களிடம் தெரிவிக்க தான் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

இது தொடர்பாக அவரை விசாரிக்க வேண்டும் என்று பலர் கருத்து தெரிவித்ததை அடுத்து இரகசிய பொலிஸார் அவரை விசாரித்தனர். அப்போது இந்திய அரசாங்கமே அந்த சூத்திரதாரி என்றும் மத்தல விமான நிலையம் போன்ற பாரிய பொருளாதார திட்டங்களை இந்தியாவுக்கு வழங்காமையே அதற்கான காரணம் என்றும் கூறியிருந்தார்.

ஒரு இந்திய இராஜதந்திர அதிகாரியே தம்மிடம் இந்த தகவலைத் தெரிவித்ததாகவும் அவர் இரகசிய பொலிஸாரிடம் கூறியிருந்தார். ஆனால், இதனை எவரும் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து விசாரணைகள் நடைபெறவுமில்லை.

இதனையடுத்து, கடந்த வாரம் பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட இரண்டு குழுக்களின் அறிக்கைகள் தம்மிடம் இருப்பதாக பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைசசர் விஜித்த ஹேரத் அரசாங்கம் அந்த அறிக்கைகளை நிராகரிப்பதாக தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகமான இலங்கை கத்தோலிக்கர்களின் தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் கத்தோலிக்க சமூகம் இந்த அறிக்கைகளை நிராகரிப்பதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் புதிய அரசாங்கத்தால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவையும் முன்னாள் இரகசிய பொலிஸ் பணிப்பாளர் ஷானி அபேசேகரவையும் குறி வைத்தே அந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐந்தாண்டுகளாக இந்த பயங்கரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி அக்கறை செலுத்தாதவர்கள் இப்போது ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இவ்வறிக்கைகளில் எது இருந்தாலும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலானது நீண்ட காலமாகவே அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது என்பது மிகத் தெளிவான விடயமாகும். அக்கொடூர சம்பவம் இடம்பெற்று ஐந்து நாட்களில் இது பாதுகாப்புத் துறையின் பலவீனத்தின் காரணமாகவே இடம்பெற்றுள்ளதாகவும், அதே ஆண்டில் நடைபெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதாகவும் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் இந்தச் சம்பவத்தைப் பாவித்து முஸ்லிம்களுக்கு எதிராக மிக மோசமான முறையில் இனவாதத்தைத் தூண்டியே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியது. அதே காலத்தில் தாம் தாக்குதலின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதாக கோட்டாவும் அவரது கட்சியும் கர்தினாலுக்கு உறுதியளித்தும் இருந்தது. ஆயினும், பதவிக்கு வந்ததன் பின்னர் அந்த அரசாங்கம் புதிதாக எதனையும் செய்யவில்லை. தாக்குதல் இடம்பெற்ற மைத்திரியின் பதவிக் காலத்தில் கைது செய்யப்பட்ட நௌபர் மௌலவியே சூத்திரதாரி என்று கோட்டாபயவின் அரசாங்கத்தின் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறினார். கிறிஸ்தவ மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

இப்பயங்கரவாத தாக்குதலைப் பற்றி விசாரிக்க மூன்று ஜனாதிபதிகளின் காலத்தில் நியமிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் ஆணைக்குழுக்கள் ஆகியவற்றை ஆராய்ந்தால், இந்நாட்டு அரசியல்வாதிகள் எந்தளவுக்குத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றி இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

சம்பவம் இடம்பெற்று மறுநாள் அதாவது 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதைப் பற்றி விசாரணை செய்வதற்காக உயர் நீதிமன்ற நீதியரசர் விஜித் மலல்கொட தலைமையில் மூவர் கொண்ட குழுவொன்றை நியமித்தார். அக்குழு அதே ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி தமது அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் கையளித்தது.

இரண்டாவதாக, சம்பவத்துக்கு ஒரு மாதத்துக்குப் பின்னர் 2019ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையொன்றின் மூலம் அச்சம்பவத்தைப் பற்றி விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அப்போதைய பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே அதிகாரிகளுக்குக் கிடைத்த உளவுத் தகவல்களின் படி, நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று ஆராய்வது அதற்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களில் ஒன்றாகும்.

தெரிவுக் குழுவின் விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் காலத்திலேயே ஜனாதிபதி மைத்திரிபால மற்றொரு விசாரணைக்காக 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி ஆணைக்குழுவொன்றை நியமித்தார். இந்த சம்பவத்தைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட மூன்றாவது பொறிமுறையான அவ்வாணைக்குழு உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனக் டி சில்வாவின் தலைமையில் இயங்கியது.

ஒரு வருடத்துக்கு மேலாக விசாரணைகளை மேற்கொண்ட அவ்வாணைக்குழு 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி தமது அறிக்கையை அப்போது ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தது. ஜனாதிபதி மைத்திரிபால உள்ளிட்ட நாட்டில் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த பலருக்கு எதிராகக் குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று அவ்வாணைக்குழு பரிந்துரைத்திருந்தது.

நான்காவதாக, இத்தாக்குதல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் 12 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்குதல் செய்யப்பட்டன. அவற்றை விசாரித்த உயர் நீதிமன்றம், கடந்த வருடம் ஜனவரி மாதம் 12ஆம் திகதி அதன் தீர்ப்பை வழங்கியது. அதன் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 கோடி ரூபாய் நட்டஈடு வழங்க வேண்டும் என்று கூறப்பட்டது. அரச உளவுத்துறை சேவையின் அதிபராக இருந்த பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன மற்றும் தேசிய உளவுத்துறை அதிபர் சிசிர மெண்டிஸ் உள்ளிட்ட மேலும் சிலருக்கும் நட்டஈடு வழங்கக் கட்டளையிடப்பட்டது.

பிரித்தானியாவில் இயங்கும் செனல்4 என்ற தொலைக்காட்சி நிறுவனம் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைப் பற்றி ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்பியது. அதன் மூலம் அரச உளவுத்துறை சேவையின் அதிபர் துவான் சலேயே இத்தாக்குதலைத் திட்டமிட்டுள்ளார் என்று கூறப்பட்டது. இது நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தவே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அக்குற்றச்சாட்டைப் பற்றி விசாரிக்கவென அதே மாதம் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம் தலைமையில் மூவரடைங்கிய குழுவொன்றை நியமித்தார்.

அதன் அறிக்கை இவ்வருடம் ஜூன் மாதம் ஜனாதிபதி ரணிலிடம் கையளிக்கப்பட்டது. இது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஐந்தாவது குழுவாகும்.

அதன் பின்னர் ஆறாவது குழுவாக இவ்வருடம் ஜூன் மாதம் எந்தவொரு காரணமுமின்றி ஜனாதிபதி ரணில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்குக் காரணமாக இருந்த உளவுத்துறை பலவீனங்களைப் பற்றி விசாரிக்க ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.என்.ஜே.டி.அல்விஸ் தலைமையில் மற்றொரு குழுவை நியமித்தார். கத்தோலிக்க திருச்சபை ரணில் நியமித்த இவ்விரு குழுக்களையும் அநாவசியமானவை என்று நிராகரித்தது. இவ்விடயம் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதே செய்ய வேண்டியது என்றும் கத்தோலிக்க திருச்சபை கூறியது.

இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட மலல்கொட குழு, நாடாளுமன்ற தெரிவுக் குழு, ஜனாதிபதி ஆணைக்குழு, உயர் நீதிமன்ற விசாரணை மற்றும் இமாம் குழு ஆகியனவும் உளவுத்துறையின் பலவீனங்களை ஆராய்ந்திருந்தது. ஏனெனில், இத்தாக்குதலைப் பற்றி முன்கூட்டியே இந்தியாவிடமிருந்து தகவல் கிடைத்திருந்தது என்பது புறக்கணிக்க முடியாத விடயமாக இருந்தது.அவ்வாறு இருக்கத் தான் ரணில் நீதிபதி அல்விஸ் தலைமையிலான குழவை அதே விடயத்தை ஆராய நியமித்தார்.

அதேவேளை, ஏற்கெனவே அமெரிக்காவின் எப்.பி.ஐ. பொலிஸார் மற்றும் பிரித்தானிய பொலிஸாரும் அவுஸ்திரேலிய, சீன, இந்திய மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் விசாரணைக் குழுக்களும் விசாரணைகளை நடத்தி அறிக்கைகளைச் சமர்ப்பித்து இருக்கும் நிலையில், வேறு என்ன விசாரணை நடத்த இருக்கிறது என்று ஜனாதிபதி ரணில் கடந்த வருடம் ஒக்டோபர் 2ஆம் திகதி ஜேர்மனியின் டௌச்செவெலா தொலைக்காட்சியோடு நடத்தப்பட்ட நேர்காணல் ஒன்றில் கேள்வி எழுப்பியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த அல்விஸ் குழுவின் அறிக்கையில் தான் ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோரை விசாரிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மலல்கொட குழு, நாடாளுமன்ற தெரிவுக் குழு மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியவற்றின் முன் அவர்கள் சாட்சியமளித்த போதிலும், அவர்கள் விசாரிக்கப்படவேண்டும் என்று அவை பரிந்துரைக்கவில்லை. தேசிய மக்கள் சக்தி இவ்விருவரையும் உள்ளடக்கி ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகளின் அமைப்பொன்றை ஆரம்பித்து ஒரு சில நாட்களிலேயே அல்விஸ் குழு நியமிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அதன் அறிக்கை தமக்குத் தபாலில் வந்ததாக கம்மன்பில கூறுகிறார். அனைத்தையும் கூட்டிக் கழித்து என்ன நடந்திருக்கிறது என்று ஊகிக்க வேண்டியுள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

மேகம் கருமையாகும். பின்னர், அதுவே ஒரு சில நேரங்கள் செல்ல, வெளுத்து, வானம் நீல நிறமாகி விடும். இதுபோலவே மானிட வாழ்க்கையும். சில பொழுது கவலை, அடுத்து மகிழ்ச்சி, சின்ன சின்ன அதிர்வுகள். அது போய்விட, நகைச்சுவை பேச்சுகள், நண்பர்கள், உறவினர்களுடன் அரட்டை.

குடும்பங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் இருப்பர். சகலருக்கும் மனம் மாறிமாறிப் புரளும். இதைக் கண்டுகொள்ளாமல் இருப்பதுவே நல்லது. மீண்டும் அவர்களே திரும்பி வருவார்கள்.

சின்னக் காரியங்களைப் பெரிதாகக் கருதலாகாது. நாங்களும் அவர்களில் ஒருவர் அல்லவா. எனவே, எவரையும் ஒதுக்குவது கூடாது.

தவறு செய்தல், கோபித்தல், ஒதுங்கி நடத்தல், கண்டபடி ஒரிவரை சீண்டுதல் இவை எல்லாம் நடந்துகொண்டே இருக்கும்.

மிருகங்களுக்கும் உணர்வு உண்டு. ஒருகணம் ஒடிப்பிடிக்கும் சுபாவமும் மறுகணம், கத்திச் சண்டை செய்வதும் இயல்பானது. இவை உயிரினங்களின் இயல்பு.

எனவே, மனஸ்தாபப்படுவதும் பின்னர், ஒன்றிணைவதும் உயிரினங்களுக்கும் எமக்கும் உள்ள ஒற்றுமையாகும். உயிர் வாழ்வு ஒன்றேதான்.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாதையை புனரமைத்து தருமாறு கோரிக்கை

கொடுக்குளாய்-இயக்கச்சி அபாய வெளி பாதை தற்பொழுது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டு கழகத் தலைவருமாகிய கணேஸ்வரன் திங்கட்கிழமை (29) அன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

"இந்த அபாய வெளி பாதை வழியாக நாளாந்தம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர். குறித்த பாதை தற்பொழுது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதால் கையிருப்பில் உள்ள சிறு நிதியைக் கொண்டு பள்ளங்களை கிரவல் மூலம் மூடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். இந்த பாதை புனரமைப்பு செய்யாவிட்டால் பலர் உயிரிழக்க நேரிடும்.

இந்த அபாய வெளி பாதை இருந்திருந்தால் வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்த பலரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும்.

வர்த்தக போக்குவரத்து,அரச ஊழியர்கள்,பாடசாலை மாணவர்கள்,மருத்துவ நோயாளிகள் என பலர் இந்த பாதையில் பயணிப்பதை அரசாங்கமும்,அரசியல்வாதிகளும் அறிந்தும் கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு முறையாவது எமது பிரதேசத்திற்கு வந்து இந்த அவல நிலையைப் பார்வையிட வேண்டும்

மழைக்காலம் என்பதால் அவசரமாக இந்த வீதியை கிரவல் கொண்டு செப்பனிட இருப்பதால் முடிந்தவர்கள் உதவி புரிந்து வடமராட்சி கிழக்கு மக்களின் உயிர் கேடயமாகக் காணப்படும் கொடுக்குளாய்-இயக்கச்சி பாதை புனரமைப்பு செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்" என்றார்.

- எஸ்.தில்லைநாதன்



### மன அழுத்தத்தை குறைக்க

# பயணம் ஒரு சிறந்த வழி

திருச்செல்வம் ஜனனீ,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழக இரண்டாவது வருட 'செமஸ்டர்' முடிவடைந்ததைத் தொடர்ந்து, நானும் எனது நண்பர்கள் உட்பட ஐந்து பேரும் ஒரு சிறிய விடுமுறைக்குப் 'பிளான்' போடலாம் என்று இறுதியாக ஒரு முடிவெடுத்தோம். பல மாதங்களாகப் பாடங்களிலும் பரீட்சைகளிலும் மூழ்கியிருந்த நாங்கள், சிறிது சுதந்திரமாக உணர ஒரு இடம் தேடினோம். அதற்கான சரியான தீர்வாக நமக்குப் புரிந்தது நுவரெலியா என்ற இடமே. பயணத்தின் திட்டம் நாங்கள் கற்றுத்தேற்றிய அனைத்து சோதனைகளின் மத்தியில், நுவரெலியாவின் இயற்கை அழகு நம் மனதில் ஒருவித பரவசத்தை ஏற்படுத்தியது. இலங்கையின் 'சிறிய இங்கிலாந்து' என்று அழைக்கப்படும் நுவரெலியா, அதன் குளிர்ச்சியான வானிலை, சூழல் நிறைந்த தேயிலை மலைகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பசுமையான வயல்கள் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் கனவு இடமாக விளங்குகிறது.

நாங்கள் எங்கள் பயணத்தை மூன்று நாட்களுக்குத் திட்டமிட்டிருந்தோம். பயணத்தின் தொடக்கம் பயணத்திற்கு முன்பே எங்கள் மனங்களில் உற்சாகம் ததும்பியிருந்தது. பயணம் ஆரம்பித்தவுடன் காரில் நண்பர்களுடன் இணைந்து அனைவரும் சேர்ந்து பாடல்களைப் பாடி, அந்த தருணங்களைக் கொண்டாடினோம். அனைவரும் ஒரே மனதுடன் பாடல்களைப் பாடிக் கொண்டாடியது நம்மை இன்னும் ஒன்றிணைத்தது. அது பயணத்தை மகிழ்ச்சியான தாக்கியது. நுவரெலியா வந்தபின், அங்கு உள்ள குளிர்ச்சியான இயற்கை எங்களை வரவேற்றது.

எங்கள் முதல் நாள் கிரிகரி ஏரி அருகே ஆரம்பித்தது. நுவரெலியாவின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் இங்கே படகு சவாரி, தண்ணீர் விளையாட்டுகள்,போன்ற விளையாட்டுகளை விளையாடுவதுடன் அமைதியான நேரத்தை இனிமையாகக் கழிக்கின்றனர். ஏரியின் பசுமைச் சூழல், இயற்கையை நேசிக்கும் மக்களுக்குப் பெரும் கவர்ச்சியாகும். குளிர்ந்த காற்று, நீரில் பாய்ந்த படகுகள், எங்களை இயற்கையின் மடியில் உள்ள ஒரே கணத்தில் இழுத்துக்கொண்டது. குளிர்ந்த காற்று, நீரில் பாய்ந்த படகுகள், எங்களை இயற்கையின் மடியில் உள்ள ஒரே கணத்தில் இழுத்துக்கொண்டது. அங்கிருந்து, விக்டோரியா பூங்காவிற்குச் சென்றோம், மிக அழகான பூங்கா, பசுமையாக அலங்கரிக்கப்பட்டது. பூங்காவின் அமைதியான சூழல் எங்களை மெய்மறக்கச் செய்தது. நுவரெலியாவின் மையத்தில் அமைந்துள்ள இந்த பூங்கா, 1897 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசி விக்டோரியாவின் வைர விழாவை நினைவுகூரும் வகையில் உருவாக்கப்பட்டது. இது சுற்றுலாப் பயணிகளுக்குப் பொழுதுபோக்கு இடமாகவும், தாவரவியல் ஆர்வலர்களுக்குப் பெரும் களமாகவும் விளங்குகிறது. 27 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த பூங்கா, பலவிதமான தாவரங்கள் மற்றும் மலர்களின் நறுமணத்தைப் பரப்புகின்றது. அதனுடன் இணைந்து அங்குள்ள ஏரியும் பறவைகளும் எங்களை மிகவும் கவர்ந்து மனங்களைக் கொள்ளை கொண்டது. இயற்கையின் மடியில் நடுத்தர நாட்களில், ஹார்டன் பிளெயின்ஸ் எனும் தேசிய பூங்காவுக்குப் பயணித்தோம். உலகின் ஓரம் எனப்படும் இடத்தில் நின்றபோது, எங்கள் கண்களில் இயற்கையின் பெருமையைக் கண்டோம்.

தேயிலை மலைகளின் மத்தியில் நமது பயணத்தின் முக்கியக் கட்டமாகத் தேயிலைத் தொழிற்சாலைகளைப் பார்வையிடுதல் இருந்தது. நுவரெலியா தேயிலைத் தோட்டங்கள் அதன் சிறந்த தரம் கொண்ட தேயிலை உற்பத்திக்காக உலகம் முழுவதும் பிரபலமாக உள்ளது. நீண்ட வரலாற்றைக் கொண்ட இத்தேயிலைத் தோட்டங்கள், பிரிட்டிஷ் காலத்தில் உருவாக்கப்பட்டன. நுவரெலியாவின் பிரபலமான மாக்வுட் லப்ர்டன் தேயிலைத் தோட்டம் மற்றும் பேட்ரியார்ச் ஹில் எனும் இடங்களில் காற்றில் நறுமணமாகத் தேயிலை தழுவியது. அங்கே நாங்கள் தேயிலை தயாரிப்பு முறைகளை நேரில் கண்டு, நாங்கள் தமக்கென சில தேயிலை வகைகளை வாங்கி மகிழ்ந்தோம். இவ்வாறு இரண்டு நாட்கள் கழிந்தன மறுநாள், பேக்கர் நீர்வீழ்ச்சியின் குளிர்ந்த நீரைத் தொட்டுச்சென்றது நம் உடலை புதுப்பித்தது. இந்த நீர்வீழ்ச்சி நுவரெலியாவைச் சுற்றியுள்ள மிக அழகான நீர்வீழ்ச்சிகளில் ஒன்றாகும். இது பசுமையான காடுகளின் நடுவே அமைந்துள்ளது, மற்றும் இது செல்லும் பாதை ஆபத்தான மற்றும் எங்கள் வாழ்வில் ஒரு சுவாரஸ்யமான அனுபவமாகும். நீர்வீழ்ச்சியின் நீண்ட அலைகள் மற்றும் அதன் சுற்றியுள்ள அழகிய காட்சிகள் இதைக் காண அழைத்துச் செல்கின்றன. மூன்றாம் நாளில் கிரிகோரி ஏரிக்குச் சென்றோம். நுவரெலியாவைச் சுற்றியுள்ள கிரிகோரி ஏரியில் நடைபெறும் நீர்விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைளை நானும் எனது நண்பர்களும் இரசித்தோம். இது உயரமாகக் காட்சியளிக்கும் ஏரியாகும். அதன் நீர் உயரம் சுமார் 60 மீற்றர் ஆகும். இதன் அருகில் சுறுசுறுப்பான இயற்கைக் காட்சிகள், பயணிகளை வியக்க வைக்கின்றன. பயணத்தில் ஒன்றைக் குறிப்பிட மறந்து விட்டேன். நுவரெலியாவின் பிரபலமான உணவகங்களில் பல சுவையான உணவுகளைச் சுவைத்தோம். எங்களுக்குச் சோறும் முக்கியம் தானே சூடான சூப்புகள், தேநீர் பிரியாணி, இடியப்பம் போன்ற பலவகை உணவுகளை ருசித்து மகிழ்ந்தோம். குளிர்ந்த காலநிலையுடன் சூடான உணவுகள் எமக்கு ஓரளவுக்கு குளிரை போக்கின. அத்தோடு, நண்பர்களுடன் உணவருந்திய ஒவ்வொரு தருணமும் அனுபவம் நிறைந்த ஒன்றாக இருந்தது. மறுநாள் சூரிய உதயக் காட்சியை பார்த்து இயற்கையின் அழகை இரசிக்க கடல் மட்டத்திலிருந்து சுமார் 6890 அடி உயரத்தில் அமைந்துள்ள ஒற்றை மரமலைக்கு சென்றோம். அதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் அதில் ஏற முடியவில்லை. பயணத்தின் இறுதி நாள் எனது மஸ்கெலியாவில் உள்ள எனது நண்பன் வீட்டுக்குச்சென்றோம். அங்கிருந்து கிரிவன் எலியா என்ற சிறிய கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள லக்ஸ்பான நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்கு நண்பனின் குடும்பத்துடன் சென்றதும் அம்மாவின் கையால் அங்கிருந்து உணவருந்திய நினைவுகள் காலத்தாலும் மறக்காது. மொத்தத்தில் மூன்று நாட்கள் போட்ட திட்டம் நாளாவது நாளையும் தாண்டியது. நுவரெலியாவின் மடியில் பயணித்த கழித்த நாட்கள் பாடல்களும் கச்சேரிகளுடன் நாம் சென்ற நினைவுகள் குளிருக்கு சுவட்டெரை அணிந்து கொண்டு பயணம் செய்ததும் மலையக மக்களின் வாழ்வியல் மற்றும் அவர்களது உணவுப் பழக்கங்களை நாமும் அறிந்து கொண்டதும் எங்களுக்குப் புதுவிதமான அனுபவத்தையும் தந்தன. அதோடு மட்டுமன்றி, அந்த சிறிய விடுமுறை நண்பர்களுக்குள் வந்து மனக்கசப்பு அது தீர்ந்தபின் ஏற்பட்ட நட்பின் அழகையும் ஒருவருக்கொருவர் மீண்டும் புரிந்துகொள்ள உதவியது. ஒட்டு மொத்தத்தில் இந்த பயணத்தில் நாங்கள் இயற்கையின் அழகை மட்டுமல்ல, எங்கள் நட்பின் அழகையும் மீண்டும் அறிந்துகொண்டோம் நகரின் குளிர்ந்த மலைகள், அற்புதமான தேயிலைத் தோட்டங்கள் நம்மை மறக்க முடியாத அனுபவங்களுக்கு இட்டுச் சென்றன.



தங்கராசா விதுஷன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



# நிலாவரைக் கிணறு

நிலாவரை கிணற்றின் அமைவிடம் பற்றி நோக்கும்போது, யாழ். நகருக்கு வடக்கு திசையில் 16 கி.மீ. தொலைவில் அச்சுவேலி நோக்கி செல்லும் ராசவீதி புத்தூர் பருத்தித் துறை நெடுஞ்சாலை சந்திக்கும் சந்தியில் வழிகளுக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்டது. 275 கிராம சபை பிரிவுக்குள் உள்ள நவக்கிரி எனும் ஊரில் நிலாவரை கிணறு அமைந்துள்ளது. இதற்கருகில் நவசைலேஸ்வரன் என்னும் சிவன் ஆலயம் ஒன்று உண்டு.

பண்டைய காலத்தில் கிணற்றின் ஆழம் யாருக்கும் தெரியாததால் அதன் ஆழம் வானில் உள்ள நிலா வரைக்கும் என சொல்லப்பட்டதால் இதன் பெயர் நிலாவரை எனப்பட்டது. இந்த நிலாவரை கிணற்றை இராமாயண கதையோடு தொடர்புப்படுத்திக் கூறப்படுகிறது. இதனால் சுற்றுலா ரீதியிலும் முக்கியம் பெறுகின்றது. அதாவது இராமன் சீதையை மீட்பதற்காக இராவணனுடன் போர் புரிவதற்கு வானர படைகளுடன் இலங்கை வந்த போது வானரப் படைகளின் நீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அம்பை ஊன்றி நீர் எடுத்த இடம் இது என்று கர்ண பரம்பரை கதை கூறுகின்றது.

ஆனால், புவிச் சரிதவியலாளர்கள் இக் கிணற்றின் தோற்றத்திற்கான உண்மையான காரணம் அரித்தல் செயல்முறை ஆகும் என குறிப்பிடுகின்றனர். யாழ்ப்பாணம் உட்பட மன்னாரிலிருந்து பரந்தன் முல்லைத்தீவு இணைக்கும் கோட்டுக்கு வடக்காக உள்ள பிரதேசங்கள் யாவும் மயோசின் காலத்திற்குரிய சுண்ணாம்பு கற்பாறையில் உருவான நிலத் தோற்றமாகும். இவை மயோசின் காலத்தில் நீருக்கு கீழிருந்து மேல் உயர்த்தப்பட்டுள்ளது. மழையின் மூலம் பெறப்படும் நீர் நிலத்துக்குள் ஊடுருவிச் சென்று கடினமான அடித்தள சுண்ணாம்பு கடற்பாறை படைகளில் தங்கி நிற்கிறது. இதுவே தரை கீழ் நீராகக் காணப்படுகிறது. கிணறு தோண்டும் போது தரைகள் நீரை ஊற்றாகக் கிணற்றுக்குள் வந்து தேங்குகிறது.

இவ்வாறான ஊற்றுக் கிணறுகள் போன்று சிறு துளைகள் நீண்ட காலமாக இடம் பெறும் இரசாயன அழிதலுக்கு உட்பட்டு பெரிய பாலமாக உருமாறி விடுகின்றது. இவை சில அடி முதல் பல மைல் நீளம் வரை ஒரே தொடராகத் தரைக்குக் கீழே அமைகின்றன. பிலமானது மேலும் அரிக்கப்பட்டு பிலத்தின் மேற்பரப்பு இடிந்து விழுகின்றது.

இவ்வாறு மேற்பரப்பு இடிந்து விழுந்ததால் உருவானதே நிலாவரை கிணறு ஆகும். யாழில் பல இவ்வாறான கிணறுகள் காணப்படுகின்றன. உதாரணமாக புன்னாலைக் கட்டுவன் குளக்கிணறு, அல்வாய் மாயக்கைகுளம், கரவெட்டி குளக்கிணறு போன்ற பல உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலாவரை கிணற்றின் முக்கியத்துவம் 2010இற்கு பின்னர் தான் விவசாயத்திற்கு அப்பால் கலாசார சுற்றுலாவில் மிக முக்கியம் பெற்றது. இந்த நிலாவரை கிணறு தன்னுால் பல மர்மங்களையும் வியப்புக்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. அவற்றைக் கண்டறியும் வகையில், பல நூற்றாண்டு காலமாக உலகில் உள்ள பல நாடுகளிலிருந்து வந்து ஆராய்ச்சியாளர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டு இருந்தார்கள். அதாவது பிரித்தானியா, ஜேர்மனி, செக் குடியரசு போன்ற நாடுகளிலிருந்து பல ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர். ஆயினும், ஆழம் பற்றிய முடிவுகளை அவர்களால் தர முடியவில்லை. அத்துடன், தொல்லியல் திணைக்களத்தின் அனுமதி பெறாமையினால் அதன் முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

நிலாவரையின் ஆரம்பகால ஆய்வுகள் பெரும்பாலும் ஆழத்தைக் கண்டறிவதாகவே காணப்பட்டது. அந்த வகையில் 1824ஆம் ஆண்டு பங்குனி மாதம் வோடிபில் ஒக்லாண்ட் கைகின்னின் அனுசரணையுடன் நிலாவரையின் ஆழம், நீர் மற்றும் வேகம் என்பன பற்றி ஆராயப்பட்டது. இந்த ஆய்வின் பயனாக இதன் ஆழம் அப்போதைய தொழில்நுட்பத்திற்கு ஏற்றாற் போல் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது, இதன் ஆழம் 164 அடியாகவும் கடல் மட்டத்திலிருந்து 0.25 அடி ஆழத்தில் நீரைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள நிலா வரை கிணறு 52 அடி நீளம் 31 அடி அகலம் கொண்டதாக நீள் சதுர வடிவில் அமைந்துள்ளது. மற்றும் இந்த கிணறு ஆழ்துளைக் கிணறு என அப்பகுதி மக்கள் அடையாளப்படுத்துகின்றனர். இருப்பினும், கிணற்றின் ஆழம் 1895ஆம் ஆண்டில் டாம்லின் என்பவரால் சில பம்பிங் மற்றும் பிளம்பிங் செயல்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் கண்டறியப்பட்டது. அவர் இந்த கிணற்றின் ஆழத்தை வடக்கு பக்கத்தில் 145 அடி தெற்கு பக்கத்தில் 120 அடி மற்றும் மேற்கு பக்கத்தில் 121 அடி என்று கணக்கிட்டது.

1917ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இருந்த போல் பிரிஸ்தனது குறிப்புகளில் கிணற்றுக்கு மேலாக அப்பகுதியில் பௌத்த இடிபாடுகள்

> **இந்த நிலாவரை கிணற்றின் முக்கியத்துவம் 2010இற்கு பின்னர் தான் விவசாயத்திற்கு அப்பால் கலாச்சார சுற்றுலாவில் மிக முக்கியம் பெற்றது. இந்த நிலாவரை கிணறு தன்னூல் பல மர்மங்களையும் வியப்புக்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. அவற்றைக் கண்டறியும் வகையில், பல நூற்றாண்டு காலமாக உலகில் உள்ள பல நாடுகளிலிருந்து வந்து ஆராய்ச்சியாளர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டு இருந்தார்கள்**

இருந்ததாகக் குறிப்பிடுகிறார். இதற்கு இன்னொரு சான்றாக இலங்கையில் டச்சு காலத்திலிருந்த டச்சு மந்திரி ரெவ்பிலிப்பஸ் போல்டேயஸ் தனது பயணக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிடும் புத்த கோயில் புத்தகமுவ என்ற இடத்திலிருந்ததாக குறிப்பிடுகிறார். புத்தகமுவவில் உள்ள இக்கோயில் விஜயபாகு என்பவனால் புதுப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மேற்சொன்ன கருத்தை உறுதிப்படுத்து முகமாக 1952ஆம் ஆண்டு டிசெம்பர் 9ஆம் திகதி மேற்கொண்ட ஆய்வு காணப்படுகிறது.

நிலாவரை கிணற்றின் மேற்கே 250 கி.மீ. தொலைவில் விவசாயி ஒருவரால் உடைந்த புத்தர் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலிருந்து இடுப்பு வரை உள்ள பகுதி மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது. மீதமுள்ள பகுதி 3 அடி 3.5 அங்குல உயரமும் தலைப்பகுதி 1 அடி 2 அங்குல நீளம் கொண்டது. மூக்கு பகுதி சேதம் அடைந்துள்ளது. சுமார் 2 தொடக்கம் 4 அடி ஆழத்தில் புதைந்துள்ள மற்ற பகுதிகள் மற்றும் சில பானை ஓடுகளும் காணப்பட்டன. இவை யாழ். தொல்பொருள் அருங்காட்சியகத்திற்கு மாற்றப்பட்டன. கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் எச்சங்களும் கண்டறியப்பட்டன .எனவே இடத்தின் பௌத்த மதத்தின் செல்வாக்கு இருந்தமை ஆய்வின் மூலம் அறிய முடியும்.

1965இல் நிறுவன வடிகால் அமைப்பு சபையினர் நிலாவரைக் கிணற்றில் மேற்கொண்ட ஆய்வின்படி 10 மணித்தியாலங்களில் 30 ஆயிரம் தொடக்கம் 40,000 கலன் நீர் இறைக்கப்பட்டு மேலும் நீர் இறைக்கப்படின் உப்பு நீர் மேலோங்கி வருவது அவதானிக்கப்பட்டு, அந்த முயற்சி நிறுத்தப்பட்டது. இதன் மூலம் யாழ்ப்பாண குடா நாட்டின் தரைக் கீழ் நீர்வளம் உப்பு நீரின் மேல் மிதப்பதை ஆய்வுகள் உறுதி செய்துள்ளன.எனவே நல்ல நீர் கிடைக்கும் கிணற்றிலிருந்து அதிகளவு நீரை வெளியேற்றும் போது, நீர் உவர் தன்மை அடைகின்றது. இன்று குடா நாட்டின் பல இடங்களில் இந்நிலைமை உருவாகி வருகிறது மற்றும் மழைக்காலத்தில் குடாநாட்டில் தரைக்குள் நீரின் பெரும் பகுதி வீணாகக் கடலை சென்றடையும் நிலை பல இடங்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, நன்னீர் வளம் எவ்விதம் உவர் நிலை அடைகிறது என்பதை அடையாளப்படுத்தும் வகையில் இவ்வாய்வு முக்கியம் பெறுகிறது.

1969இல் இலங்கை நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ். ஆறுமுகம் இந்த கிணற்றின் ஆழம் 164 அடி ஆறு அங்குலம் என குறிப்பிட்டார். மற்றும் 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி மத்திய கலாச்சார நிதியம் கடல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழுவுடன் நிலாவரை கிணற்றின் அடிப்பகுதியைக் கண்டறிய ஒரு பயணத்தை மேற்கொண்டார்.

இந்த பயணத்தின் போது, அவர்கள் கிணற்றின் அடிப்பகுதியை வெற்றிகரமாகக் கண்டுபிடித்து கிணற்றின் அதிகபட்சம் ஆழம் 50 மீற்றர் என அறியப்பட்டது.

(வியாழக்கிழமை தொடரும்...)
(புதன்கிழமை தொடர்ச்சி)





# வாசிப்பின் மகத்துவம்



பாத்திமா சபா,
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

வாசிப்பு என்பது அறிவுக்கான வாசல். அது மனித மனங்களை மாற்றி, உலகத்தைக் காணும் பார்வையை விரிவாக்கும் ஓர் அற்புதக் கலையும் அறிவியல் முயற்சியுமாகும். வாசிப்பின் மூலம் நாம் அறிந்து கொள்வது மட்டும் அல்ல, அதை அனுபவித்து வாழ்வின் ஒவ்வொரு அம்சங்களையும் பெற்றுக் கொள்கிறோம். வாசிப்பு மனிதனை உருவாக்கும், சிந்தனை வளர்க்கும் மகத்தான கருவி என்பதால், அது வாழ்க்கையின் அர்த்தத்தை முழுமையாக்கும் கலை என்றே கூறலாம்.

மேலும், வாசிப்பு என்பது ஒவ்வொரு மனிதரின் உள்ளுணர்வையும் கற்பனையையும் பெருக்கும் ஓர் சக்தியாகும். மனிதனுக்கு அவன் வாழ்ந்த காலத்தில் எது நேரடியாக அனுபவிக்க முடியாதவையோ, அவற்றையும் வாசிப்பின் வழியாகஅனுபவிக்க முடிகின்றது. அந்த வகையில், வாசிப்பு மனிதனின் உள்ளக அனுபவங்களைப் பெருக்குகின்றதுடன், அவனின் அறிவையும் பெருக்குகின்றது.

இன்றைய தொழில்நுட்ப உலகில் இணையத்தின் மூலம் உலகம் முழுவதும் உள்ள அறிவினையும் நூல்களினையும் இலகுவாக வாசித்து பயன் பெற முடிகிறது. இதனால், வாசிப்பின் அவசியம் மற்றும் அதன் நன்மைகள் தனிப்பட்ட முறையில் பலகோணங்களில் பெற்றுக் கொள்ள முடிகின்றது. வாசிப்பானது பாடசாலைப் பருவத்திலிருந்து விதைக்கப்பட வேண்டிய உணர்வாகும். இதனால் தான் ஒக்டோபர் மாதத்தைத் தேசிய வாசிப்பு மாதமாகக் கல்வியமைச்சு பிரகடனம் செய்து பல்வேறு செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது. தேசிய நூலகம் மற்றும் ஆவணச்சேவைகள் சபை பாடசாலை மட்டத்தில் வாசிப்பின் விருத்திக்கென வருடாவருடம் பல்வேறு செயற்றிட்டங்களை ஊக்குவித்து வருகின்றது. வாசிப்பின் மூலம் சிந்தித்தல், ஆராய்தல், காரணம் கண்டறிதல், கற்பனை செய்தல் முதலிய திறன்கள் வளருகின்றன. ஒரு மனிதன் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் பொழுதைத் திருப்திகரமாகப் போக்குவதற்கும் வாசிப்பு துணை நிற்கிறது. மகிழ்ச்சியாக உள்ளவனே சுயமாகச் சிந்திக்கும், ஆராயும், கருத்துக்களை வெளியிடும் நிலையில் எப்போதும் தன்னை வைத்திருப்பான். மரணித்த பின்னரும் ஒரு மனிதனுடன் உறவாடவும் தர்க்கிக்கவும் அவனை ஆய்வு செய்யவும் முடியுமான சந்தர்ப்பத்தை வழங்குவது வாசிப்பேயாகும். "பழங்கால புருஷர்களை நேரில் சந்திக்க வேண்டுமானால், அவர்களோடு உரையாட வேண்டுமானால் நூலகங்களுக்குப் போ" என அக்கருத்துக்கு வலிமை சேர்கிறார் மாஓசேதுங். மகாத்மா காந்தியிடம் "உங்களிடம் ஒரு கோடி ரூபாய் தரப்பட்டால் என்ன செய்வீர்கள்" எனக் கேட்ட போது "ஒரு நூலகம் அமைப்பேன்" என கூறியமை நூலகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது. "புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விடப் பெரிய ஆயுதங்கள் நூலகங்களே" என்கிறார் லெனின். "வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தகங்களை வாசிக்க அனுமதியுங்கள்" என்றார் நெல்சன் மண்டேலா. இவ்வாறாக, பெரும் அறிஞர்களும் போராட்டக்காரர்களும் கூட புத்தக வாசிப்பினையும் நூலகங்களையும் பற்றியே கூறிவிட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் வாசிப்பின் சுவையினை உணர்ந்ததன் வெளிப்பாடுகளே இவையாகும். இவற்றினாலேயே இவர்கள் காலம் கடந்தும் வாழுகின்றனர்.

வாசிப்பு அறிவுத்திறனை மேம்படுத்தும் ஒரு முக்கியமான பொழுது போக்காகும். புத்தகங்கள், பத்திரிகைகள் மற்றும் இதழ்கள் போன்றவற்றை வாசிப்பதன் மூலம், நாம் புதிய தகவல்களை கற்றுக் கொள்ள முடிகின்றது. இது அறிவைக் குறிக்கோளாக்கிய கல்விக்கு மிக முக்கியமாகும். கல்வி என்பது மனித முன்னேற்றத்தின் மூலாதாரம்,




மேலும் வாசிப்பு அதன் முக்கிய பங்காகவும் உள்ளது. வாசிப்பின் மிக முக்கியமான அம்சம் படைப்பாற்றலை ஊக்குவிப்பதாகும். கதைகள், கவிதைகள், மற்றும் புதினங்கள் போன்றவற்றை வாசிப்பதன் மூலம், நாம் புதிய யோசனைகளை உருவாக்க முடிகின்றது. இது நம் கற்பனைத் திறனையும், சிந்தனைத் திறனையும் மேம்படுத்துகின்றது. படைப்பாற்றல் என்பது கலை, இலக்கியம், மற்றும் விஞ்ஞானம் போன்ற அனைத்து துறைகளிலும் முக்கியமானது.

வாசிப்பு நம் சமூக உணர்வையும் அதிகரிக்கும் திறன் கொண்டது. குறிப்பாக நாவல்கள் மற்றும் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றிய புத்தகங்களை வாசிப்பதன் மூலம், நாம் பிற மனிதர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடிகிறது. இது நம் எளிய மனசாட்சியை அதிகரித்து, பிற மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள உதவுகிறது. வாசிப்பு நம் தொலைநோக்கு சிந்தனையையும் மேம்படுத்துகின்றது. புத்தகங்கள் மற்றும் கட்டுரைகள் ஆகியவற்றை வாசிப்பதன் மூலம், நாம் வாழ்க்கையின் பல்வேறு வகைகள் பற்றிய நுண்மையான புரிதலைப் பெற முடிகின்றது. இது நமக்கு நம் எதிர்காலத்தைத் திட்டமிட உதவுகிறது. வாசிப்பின் மற்றொரு முக்கியமான பயன், நம் மொழித் திறனை மேம்படுத்துவதாகும். வாசிப்பதன் மூலம், நம்மைச் சுற்றியுள்ள மொழிகளை நன்றாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. இது நம் எழுத்துத்திறனை, பேச்சுத் திறனை, மற்றும் விவாத திறனை மேம்படுத்துகின்றது. நல்ல மொழித் திறன் என்பது அனைவருக்கும் மிக முக்கியமானது. வாசிப்பு என்பது ஒரு அழியாத நண்பனாகும். அது நம்மை வளர்க்கும், நம்மை அறிவூட்டும், மற்றும் நமக்காகச் சிந்திக்கும் ஒரு நண்பனாகும். வாழ்க்கையின் எந்த தருணத்திலிருந்தாலும், வாசிப்பின் மூலம் நாம் ஒரு புதிய உலகத்தைக் கண்டுபிடிக்க முடிகின்றது. இது நம்மை உற்சாகமாகவும், நம்பிக்கையாகவும் வைத்திருக்க உதவுகின்றது.

மேலும், வாசிப்பு என்பது நமக்கு ஒரு பயண அனுபவத்தைத் தருகின்றது. புத்தகங்கள் மற்றும் கதைகள் நமக்கு ஒரு புதிய உலகத்தை அறிமுகம் செய்கின்றன. இது நம் கற்பனை சிறகுகளை விரிக்கச் செய்யும். நாம் ஒரு இடத்திலிருந்தாலும், வாசிப்பின் மூலம் நம்மை பல்வேறு இடங்களில் சென்று இருப்பது போன்ற ஒரு அனுபவத்தைப் பெற முடிகின்றது. வாசிப்பு சமூக விழிப்புணர்வை அதிகரிக்கின்றது. புத்தகங்கள் மற்றும் கட்டுரைகள் மூலம், மக்களுக்கு சமூக பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. இது மக்கள் சமூகத்தில் நல்ல தொடர்புகளை உருவாக்க உதவுகிறது. இதனால் தான் "ஒரு குழந்தை, ஒரு ஆசிரியர், ஒரு புத்தகம் மற்றும் ஒரு எழுத்தாணி உலகத்தை மாற்ற முடியும்" என்று மாலாலா யூசுஃப் கூறுகிறார்.

இந்த டிஜிட்டல் உலகில் நாம் எந்த விடயத்திலும் தொடர் கவனம் செலுத்தமுடியவில்லை என்பதே உண்மை. ஆனால், வாசிப்பு பழக்கம் நமது கவனத்தை அதிகரிக்கும் திறன் கொண்டது. நல்ல நல்ல புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்று தேர்வு செய்து எங்கள் வாசிப்பு பழக்கத்தை அதிகரித்துக் கொள்ளும்போது, அந்த பழக்கம் எங்கள் வாழ்க்கையையும் அழகாக்கி விடுகின்றது.

குறிப்பாக வாசிப்பின் மூலம் மன அமைதியையும் சிந்தனை சக்தியையும் பெருக்கமுடியும். வாசிப்பின் போது, மனித மனம் முழுமையாக ஒரு புலனுக்குக் குவிக்கப்பட்டு அதன் மூலம் மன அழுத்தம் குறைந்து, மனநிறைவு பெற முடியும். வாசிப்பு மனிதனை மனதில் ஊக்குவிக்கும் சக்தியாகவும் உள்ளது. குறிப்பாக, புத்தகங்கள், கவிதைகள், கதைகள் போன்றவற்றைப் படித்து மனதை ஒருங்கிணைத்துத் தற்காத்துக் கொள்வதற்கான உந்துதலை வளர்த்துக் கொள்ள முடியும்.

வாசிப்பு என்பது, ஒரு விதமான சிந்தனை வளர்ப்பு செயற்பாடாகும். புத்தகங்கள் படிப்பது மூலமாக, அறிவியல், வரலாறு, கலாச்சாரம், மற்றும் பல துறைகள் குறித்த அறிவு பெருகும். தனிநபர் ஒருவரின் சிந்தனைகள் வெளிப்படையாகவும் தெளிவாகவும் அமையும். புத்தகங்கள் அல்லது கட்டுரைகள் மூலமாக, ஆழ்ந்த சிந்தனைகளையும் தத்துவங்களையும் உணர முடிகின்றது. வாசிப்பின் வழியாக உருவாகும் சிந்தனை வளர்ச்சியே சமூகத்தின் முன்னேற்றத்திற்கான பாதையாகவும் அமைகின்றது.

ஒரு சமுதாயத்தின் கலாசாரம், நாகரிகம், பழக்க வழக்கங்கள், பண்பாடு ஆகியவற்றை வரலாற்றுப் பின்புலத்தில் அறிந்துகொள்ள வாசிப்பே வழிகாட்டியாக அமைகிறது. பண்டைய கால நூல்கள், வரலாற்று ஆவணங்கள், இலக்கியங்கள் போன்றவை மனித சமுதாயத்தின் முன்னேற்றப் பாதையை வாசிப்பின் வழியாக வெளிக்கொணர்கின்றன. இவ்வாறு ஒரு சமூகத்தின் அடையாளமாகவும் அதன் முன்னேற்றம் மற்றும் மாற்றங்களைப் பிரதிபலிக்கும் ஒரு முக்கியமான ஆவணமாகவும் வாசிப்பின் இடம் நிலைத்திருக்கின்றது.

கல்வி என்பது இன்றைய உலகில் ஒரு அடிப்படையான தேவையாக இருக்கின்றது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் கல்வி மூலம் அறிவு வழங்கப்படுகின்றது. வாசிப்பின் மூலம் இந்த அறிவைப் பெறுவதில் முதன்மை தரப்படும். கல்வியின் மையமாகக் கருதப்படும் வாசிப்பு முறைகள் குழந்தைகளின் அறிவாற்றலை வளர்க்கவும், அவர்களின் தனித்திறன்களை வெளிக்கொணரவும் உதவுகின்றன. வாசிப்பின் போது, கண்கள் துலங்க, மூளையின் செயற்பாடுகள் தீவிரமாக்கப்படுகின்றது. வாசிப்பு மூளையை ஊக்குவிக்கும் ஓர் விளையாட்டாகவே செயற்படுகின்றது. சில ஆய்வுகள் பின்வரும் விளக்கங்களை அளிக்கின்றன. வாசிப்பு மூளையின் அறிவியல் செயல்பாடுகளை ஊக்குவிக்கின்றது, அதே சமயத்தில் மனதிற்கு ஆறுதலையும் தருகின்றது. இது மனிதனை ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் செயல்படுவதற்கான சக்தியை வழங்குகின்றது என்பதாகும். புத்தக வாசிப்பு வாசிப்பு, ஒருவரின் சிந்தனைகளைத் தீவிரமாக்குவதோடு, உறவுகளை உருவாக்கவும் உதவுகிறது. பொதுவாக வாசிப்பின் போது ஒருவரின் சிந்தனைகள் மற்றும் பார்வைகள் மாற்றம் அடைகின்றன. இதன் மூலம் புதிய எண்ணங்கள் பிறக்கின்றன. ஒருவருக்கொருவர் புத்தகங்கள் பரிந்துரைக்கின்றனர் உரையாடல்களில் பல்வேறு கருத்துகள் இடம்பெறுகின்றன. என்பதே உண்மை வாசிப்பு மனித வாழ்க்கையில் அங்கமாகவும் ஒரு கருத்துருவாக்க செயலாகவும் இருக்கின்றது. சிறந்த புத்தகங்களைப் படிப்பது மூலம் மனிதர்கள் தங்கள் நெறிகளையும், வாழ்வியலையும் பரிபூரணமாக்கிக் கொள்கிறார்கள். வாசிப்பு வாழ்க்கையின் இலக்கை தெளிவுபடுத்தவும், தன்னம்பிக்கையையும் ஆளுமைத் தன்மையையும் மேம்படுத்தவும் உதவுகிறன்து. வாசிப்பு என்பது கற்றலின் முதற்கட்டமாகவும், அன்பின் ஒளிபரப்பாகவும் காணப்படுகிறது. வாசிப்பின் வாயிலாக அறிவு, அனுபவம், கற்பனை, மன உறுதி போன்றவை வளர்க்கப்படுகின்றன. வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஒவ்வொரு வாசகரும் புத்தகத்தைத் தவிர்க்காத பரிமாணமாகக் கருதி, தினமும் ஒரு புத்தகத்தை படித்து அதன் மகத்தான ஆற்றலினைப் பெறுவது அவசியமாகும்.



# நவீன உலகில் தியானம்

ரத்னகுமார் உமா தர்ஷனி,
இந்து நாகரிகத் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைகழகம்.

தியானம் என்பது தியானிக்க அமர்ந்ததுமே கூடிவிடாது. வானவெளியில் வட்டமிடும் ஆயிரம் மேகங்களைப்போல, அநேக எண்ணங்கள் வந்து தியானிப்பவருக்குத் தொல்லை கொடுக்கும். வேண்டாத எண்ணங்களை விலக்கி குறிக்கோளில் இறைவனை மனதில் நிலைப்படுத்தக் கொஞ்சம் நாளாகும். அது தொடர்ந்த பயிற்சியில், முயற்சியில் சாத்தியப்படும். தியானம் நம்மை மேல்நிலைக்குக் கொண்டு செல்லும் இறைவனை ஒரு புறப்பொருளாக - வெளியே இருக்கிற ஒன்றாகக் கருதியும் தியானிக்கலாம் அகப்பொருளாகக் கருதிய தியானிக்கலாம். இறைவனை மனத்தினுள்ளே இருப்பதாகக் கருதித் தியானிப்பதைத்தான் சித்த மார்க்கம் வலியுறுத்துகிறது.

பாமரர்கள் உருவமொன்றை மனத்தில் பிரதிஷ்டை செய்து தியானிப்பார்கள். பக்குவமுற்றவர்கள் இறைவனை அருவநிலையில் உருவமற்றது தியானிப்பார்கள். உருவத்தைத் தியானித்தல் குணங்களைத் தியானித்தல் வெட்ட வெளியைத் தியானித்தல் என்று அவரவர் திறனுக்கேற்ப தியானம் அமையும். உருவத் தியானம் எளிது அருவ தியானத்திற்கு - குணங்களை மட்டும் தியானிப்பதற்கு மனவலிமை முக்கியம் தியானத்தின் குறிக்கோள் இந்த உலகத்தையும் நம்மை இயக்கும் ஆதாரப் பொருளை அறிந்து அடைந்து, அனுபவிப்பதுதான் இறையானுபவத்தைப் பெறுவதே அநுபூதி அடுத்தவரிடம் விவரிக்க முடியாத ஒரு அறிவு அல்லது உணர்வு என்று இதனைக் கூறலாம்.

தியானம் அகந்தையை அழிக்கும். அறியாமையை அகற்றும் இருண்டு கிடந்த பிரதேசத்தில் ஒளியைக் கொண்டுவரும் தியானம் ஐயங்களைப் போக்கி, தெளிவைத் தரும். தியானத்தில் கிடைக்கிறது நல்லமைதி அமைதியான ஏரி நீரில் நிலவின் பிம்பத்தைக் காணமுடிகிறது. நீர் காற்றினால் அலைப்புறுகிறபோது, நிலவின் பிம்பம் சிதறும் தெளிவற்றதாகிவிடும். தியானம் இறைவனை அறியும் முயற்சியாய் தொடங்கி, தன்னை அறிவதில் முடிகிறது. தியானத்தின் மூலம் நாம் பெறுவர் அளவற்ற அறிவு, அளவற்ற வலிமை, அளவற்ற அன்பு, அளவற்ற தூய்மை சுருங்கக் கூறின், தியானம் மனிதனை மாமனிதனாக்குகிறது.

தியானம் இரண்டு வகை, ஒன்று உலகியல் சார்ந்தது. மற்றொன்று ஆன்மிகமானது. எவ்வகை தியானத்துக்கும் அவசியப்படுவது அமைதியான சூழ்நிலையும். தூய மனமும்தான் நீங்கள் தியானத்தில் வெற்றிபெற உங்களிடம் இருக்க வேண்டியவை பொறுமை நம்பிக்கை விடாமுயற்சி தியானத்தின் போது, வெளியே ஓடிக் கொண்டிருந்த மனதின் கவனத்தை உள் முகமாய்த் திருப்புகிறீர்கள்.

தியானத்தில் மனம் மட்டுமே இயக்கம் பெறும். தியானிக்கையில் புற உலகின் தொடர்புத் தற்காலிகமாய் துண்டிக்கப்பட்டுவிடும். ஆசைகளைக் குறைத்துக் கொண்டு, நல் வழியில் வாழ்பவர்க்கே தியானம் எளிதில் கைகூடும். தீவிர ஆன்ம வேட்கையும், அசையாத நம்பிக்கையும் உங்கள் முயற்சியைச் சாத்தியமுடையதாக்கும்.

அன்பே தியானத்தை அர்த்தப்படுத்தும் அன்பு மனிதர்களோடு மட்டுமல்ல. இறைவனோடும் நம்மைப் பிணைக்கிறது. தியானத்தின் மூலம் நாம் அடையக்கூடிய நன்மைகள் ஒன்றல்ல, இரண்டல்ல. ஏராளம். தியானம் தீங்கு செய்வதில்லை அணுவளவிலும் தியானம் நோய்களை அகற்றி, உடல் நலத்தைப் பராமரிக்கும் தியானத்தில் இரத்த அழுத்தம் குறைகிறது. மன அழுத்தம் தடுக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நிலையில் குறிப்பிட்ட நேரம் உட்கார்ந்து பழகுவதால் நரம்பு மண்டலத்துக்கும் நன்மை கிடைக்கிறது. தியானம் வாழ்க்கையில் ஒரு சீர்த்தன்மையைக் கொடுக்கும். இவையெல்லாம் தியானத்தின் தொடக்க நிலையில் பெறுகிற பயன்கள். தியானம் முதிர்ச்சி பெற்ற நிலையில் உள்ளது தில் பேரின்பம் ஊற்றாய்ப் பெருகும். ஞான ஒளி சுடர்விடும்.

தியானத்தின் போது, நேராக முதுகு இருப்பது மிகவும் இன்றியமையாதது. ஏனென்றால் தியானத்தில் வளர்ச்சி அடைவதற்கு ஒருவரின் முதுகுத் தண்டு மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. பரிணாம வளர்ச்சியில் நாம் பார்த்தால் விலங்குகளின் பெரும்பாலானவற்றில் முதுகுத்தண்டு கிடைமட்டமாக இருக்கும். விலங்குகளிலிருந்து அடுத்த நிலையில் பரிணாம வளர்ச்சி அடைந்த மனிதனின் முதுகுத் தண்டு மட்டுமே செங்குத்தாக இருக்கிறது. ஆன்மிக வழியில் இருப்பவர்கள் வெறும் தரையில் தியானம் செய்வதற்கு அமர மாட்டார்கள். ஏனென்றால் பூமி உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களையும் மேலும் பல்கிப் பெருகி விரிவாக்கம் செய்யும் வகையில் உள்ள ஒரு சக்தி அதிர்வாக இருக்கும்.ஒன்றைப் பலதாக மாற்றுவது. முக்கியமாக இந்த முதுகுத்தண்டைக் கிடைமட்டமாகப் பூமியின் மீது வைத்திருந்தால் அதாவது உறங்கும் நிலையில் வைத்தால் பூமியின் சக்தி அதிர்வு முழுவதும் நம் உடம்பில் பிரதிபலித்து பூமி எந்த வழியில் செல்கிறதோ அதே போன்ற ஒத்த தன்மையை அடைவோம்.

கிட்டத்தட்ட 100சதவீதம் பூமியின் சக்தி அதிர்வைப் போன்றே நம் உடலும் செயல்படும். குறைந்தபட்சம் நீங்கள் முதுகுத்தண்டை நேராக வைத்து வெறும் தரையில் உட்கார்ந்தால் கூட பூமி ஏற்படுத்தும் அதிர்விலிருந்து 90 சதவீதம் வரை முழுமையாக விலகி இருக்க முடியும். இதன் காரணமாகத்தான் ஆன்மீக நபர்கள் பெரும்பாலும், வெறும் தரையில் அமராமல், பின்வரும் வகையில் ஏதோ ஒரு வகையில் அமர்வார்கள். வெள்ளைத் துணியின் மீது அமர்ந்திருப்பார்கள், மரப் பலகையின் மீது அமர்ந்திருப்பார்கள், புலித்தோலை விரித்து அதன்மேல் அமர்வார்கள், சிலர் ஊஞ்சலின் மீது அமர்வார்கள், புலித் தோல், அதுவும் குறிப்பாக இயற்கையாக இறந்த ஒரு புலியின் தோலின் மீது அமர்வார்கள். ஏனென்றால் குறிப்பாக ஒரு புலியானது தன்னுடைய இயற்கையான குணத்தினால் அது வேட்டையாடும் போது ஒரு விலங்கைக் குறி வைத்தால் கடைசி வரை எந்தவிதமான சமரசமும் செய்துகொள்ளாமல், ஒற்றைச் சிந்தனையுடன் செயல்பட்டு அந்த விலங்கை வீழ்த்தும். புலியின் மனம் போன்ற சிந்தனை வரவேண்டும், மேலும், தியானத்தில் வெற்றி அடைய வேண்டும் என்பதற்காக முன் காலங்களில் புலித் தோலைப் பயன்படுத்தினார்கள். தற்போதுள்ள சட்டப்படி இது தண்டனைக்குரிய குற்றம். மற்றொரு முக்கியமான காரணம் என்ன என்றால், ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கியமாக இருக்கக்கூடிய குண்டலினி சக்தி விழிப்படைந்து செல்லும் பாதையாக முதுகுத்தண்டு இருப்பது. ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கியமாக இருக்கக்கூடிய குண்டலினி சக்தி விழிப்படையாத நிலையில் முதுகுத் தண்டின் அடிப்பாகத்தில் ஒரு பாம்பு சுருண்டு இருப்பதுபோல இருக்கும்.

மேலும், ஆன்மிக பயிற்சிகளைச் செய்வதன் மூலமாக முதுகுத் தண்டின் அடிப் பாகத்தில் இருக்கும் குண்டலினி சக்தியானது விழிப்படைந்து, முதுகுத் தண்டின் வழியாக மேலே ஏறு முகமாக ஏறி தலையில் உள்ள ஸஹஸ்ராரச் சக்கரத்தை அடையும். பல ஆன்மிக குருமார்கள், தங்களுடைய சீடர்களின் குண்டலி சக்தியை விழிப்படையச் செய்ய அவர்களுடைய திருக்கரத்தால் முதுகுத் தண்டை தடவி விழிப்படையச் செய்து உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குண்டலினியை விழிப்படைய வைக்கும் பல வழிகளில் இது ஒரு வழி என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக மனித உடம்பில் உள்ள ஏழு சக்கரங்களில் மூன்றரை சக்கரங்கள் அதன் சக்தி ஓட்டம் என்பது கீழ் முகமாக இருக்கும். எப்படி தண்ணீரின் ஓட்டம் என்பது மேலிருந்து கீழ் நோக்கிப் பாய்கிறதோ அது போன்று, முக்கியமாக உடம்பின் கீழ்ப் பகுதியில் உள்ள சக்கரங்கள் மூலாதார சக்கரம், சுவாதிஸ்டான சக்கரம், மணிப்பூரக சக்கரம், அனாகத சக்கரத்தின் ஒரு பகுதி கீழ்நோக்கி செயல்படும். மீதமுள்ள மூன்றரை சக்கரங்கள் அதன் சக்தி ஓட்டம் மேல் முகமாக இருக்கும்.

முக்கியமாக உடம்பின் மேல் பகுதியில் உள்ள சக்கரங்கள் ஹஸ்ராரச் சக்கரம், அக்ஞா சக்கரம், விசுத்தி சக்கரம், அனாகத சக்கரத்தின் ஒரு பகுதி மேல் நோக்கிச் செயல்படும். தியானத்தின்போது, முதுகுத்தண்டை நேராக வைக்காமல் முன்னர் கூறியதுபோல பூமி மீது கிடைமட்டமாக உறங்கும் நிலையில் வைத்தால் மேல்நிலை சக்கரங்கள் பூமி இயற்கையாகத் தன்னை இந்த உலகத்தில் தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்வதற்காக ஏற்படுத்தும் சக்திகளை தன்னகத்தே உள்வாங்கி, கொண்டு, பூமியின் பாதையில் நம்மைச் செயல்பட வழி வகை செய்யும். முதுகுத்தண்டைத் தியானம் செய்யும்பொழுது நேராக வைக்க வேண்டும் என்பது உண்மைதான். அதற்காக நாம் வலுக்கட்டாயமாக நம்மைச் சிரமத்திற்கு உட்படுத்த கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஸ்திரம், சுகம், ஆசனம் என்பது யோகாவின் தந்தையான பதஞ்சலி முனிவரின் வாக்கு. குறிப்பாகத் தியானம் செய்யும் பொழுது நாம் ஸ்திரமாக, அசைவில்லாமல் இருக்க வேண்டும். அப்படி நாம் இருக்கும் பொழுது அது நமக்குச் சுகமானதாகவும் இருக்க வேண்டும் சிரமமாக இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு நிலை தான் தியானம் செய்வதற்கு ஏற்ற ஒரு ஆசனம் என்பது மேலே கூறிய வாசகத்தின் பொருள். முதுகுத்தண்டை ஒரு சுவரின் மீது சாய்த்துத் தளர்வான நிலையில் ஒரு குறிப்பிட்ட ஆசனத்தில் அமர்ந்து தியானம் செய்யலாம்.

> **நவீன உலகில் முரண்பாடாக உற்பத்தித்திறன் மற்றும் கவனம் குறைவதற்கு வழிவகுக்கிறது. கவனச் சிதறல்களைக் குறைப்பதன் மூலமும், அறிவாற்றல் செயல்பாட்டை மேம்படுத்துவதன் மூலமும் தியானம் மனதைச் சிறப்பாக ஒருமுகப்படுத்தப் பயிற்சியளிக்கிறது. தியானத்தின் குறுகிய அமர்வுகள் கூட கவனத்தை அதிகரிக்கலாம் மற்றும் பணி செயல்திறனை மேம்படுத்தலாம், இது பல்வேறு துறைகளில் உள்ள நிபுணர்களுக்கு விலைமதிப்பற்ற நடைமுறையாக மாறும் என்று ஆராய்ச்சி கூறுகிறது**

இன்றைய வேகமான உலகில், மன அழுத்தமும் அதற்கான தீர்வுகளும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளன. எனவே, தியானத்திற்கு எதிர்காலத்தில் கூடுதல் தேவைகள் இருக்க வாய்ப்பு உள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சியுடன் கூடிய இந்த உலகில், தனிமைப்படுத்தல் மற்றும் மன அழுத்தங்கள் அதிகரிக்கின்றன. இதனால் தியானத்தின் பயிற்சிகள் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

நவீன உலகில், மன ஆரோக்கியம் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வைப் பாதிக்கும் பல்வேறு காரணிகளால் தியானத்தின் தேவை அதிகரித்து வருகிறது. சமூகம் மிகவும் வேகமாகவும், தொழில்நுட்பம் சார்ந்ததாகவும் மாறுவதால், தனிநபர்கள் அதிக அளவு மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். அறிவிப்புகள், காலக்கெடு மற்றும் பொறுப்புகளின் தொடர்ச்சியான சரமாரி நாள்பட்ட மன அழுத்தத்திற்கு வழிவகுக்கும், இது கவலை, மனச்சோர்வு மற்றும் இருதய நோய்கள் போன்ற பல உடல்நலப் பிரச்சினைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. தியானம் தளர்வு மற்றும் நினைவாற்றலை ஊக்குவிப்பதன் மூலம் மன அழுத்தத்தை நிர்வகிக்க ஒரு சக்திவாய்ந்த கருவியாகச் செயல்படுகிறது. வழக்கமான தியானம் உடலில் உள்ள கார்டிசோல் அளவை (மன அழுத்த ஹார்மோன்) குறைக்கலாம், இது தனிநபர்கள் தினசரி அழுத்தங்களைச் சிறப்பாகச் சமாளிக்க உதவுகிறது.

மேலும், உலகளவில் மனநலப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. மன ஆரோக்கியத்தைச் சுற்றியுள்ள களங்கம் குறைவதால், அதிகமான மக்கள் தங்கள் மன நலனை நிர்வகிப்பதற்கான பயனுள்ள முறைகளை நாடுகின்றனர். மனநல விளைவுகளை மேம்படுத்தத் தியானம் ஒரு பயனுள்ள நடைமுறையாக அறிவியல் பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மனநிறைவு தியானம், மனச்சோர்வு மற்றும் மனச்சோர்வின் அறிகுறிகளைக் குறைக்கும் அதே வேளையில் உணர்ச்சி கட்டுப்பாடு மற்றும் நெகிழ்ச்சித் தன்மையை அதிகரிக்கும். கவனச் சிதறல்கள் சமூக ஊடகங்கள், வேலை கோரிக்கைகள், தனிப்பட்ட கடமைகள் தனிநபர்கள் இந்த தருணத்தில் இருக்க உதவும் நினைவாற்றல் நடைமுறைகளின் அவசர தேவை உள்ளது. தியானம் பயிற்சியாளர்களை அவர்களின் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளில் தீர்ப்பு இல்லாமல் கவனம் செலுத்த ஊக்குவிப்பதன் மூலம் நினைவாற்றலை வளர்க்கிறது. அன்றாடச் சவால்களுக்குச் செல்வதிலும், வாழ்க்கையைப் பற்றிய சீரான கண்ணோட்டத்தைப் பேணுவதிலும் இந்தத் திறன் முக்கியமானது.

நவீன உலகில் முரண்பாடாக உற்பத்தித்திறன் மற்றும் கவனம் குறைவதற்கு வழிவகுக்கிறது. கவனச் சிதறல்களைக் குறைப்பதன் மூலமும், அறிவாற்றல் செயல்பாட்டை மேம்படுத்துவதன் மூலமும் தியானம் மனதைச் சிறப்பாக ஒருமுகப்படுத்தப் பயிற்சியளிக்கிறது. தியானத்தின் குறுகிய அமர்வுகள் கூட கவனத்தை அதிகரிக்கலாம் மற்றும் பணி செயல்திறனை மேம்படுத்தலாம், இது பல்வேறு துறைகளில் உள்ள நிபுணர்களுக்கு விலைமதிப்பற்ற நடைமுறையாக மாறும் என்று ஆராய்ச்சி கூறுகிறது. பல நபர்களுக்கு, தியானம் என்பது மன அழுத்த நிவாரணம் மட்டுமல்ல, ஆன்மிகம் வளர்ச்சி மற்றும் சுய-கண்டுபிடிப்பு பற்றியது. பொருள் தேடுதல்களுக்கு மத்தியில் மக்கள் தங்கள் வாழ்க்கையில் ஆழமான அர்த்தத்தைத் தேடும்போது, தியானம் உள் எண்ணங்கள் மற்றும் நம்பிக்கைகளை ஆராய ஒரு பாதையை வழங்குகிறது.

இது சுயபரிசோதனையை ஊக்குவிக்கிறது மற்றும் தனிநபர்கள் தங்கள் செயல்களை அவர்களின் மதிப்புகளுடன் சீரமைக்க உதவுகிறது. இன்றைய மாணவர்களின் கவனம், உணர்ச்சி கட்டுப்பாடு மற்றும் கல்வி செயல்திறன் ஆகியவற்றில் தியானத்தின் நன்மைகளை அங்கீகரிக்கும் வகையில், கல்வி நிறுவனங்கள் தங்கள் பாடத்திட்டங்களில் நினைவாற்றல் திட்டங்களை இணைக்கத் தொடங்கியுள்ளன. சிறு வயதிலிருந்தே மன அழுத்தத்தை நிர்வகிப்பதற்கான கருவிகளுடன் மாணவர்களை சித்திப்படுத்துவதை பள்ளிகள் நோக்கமாகக் கொண்டிருப்பதால் இந்த போக்கு வளர வாய்ப்புள்ளது. முடிவில், தியானத்திற்கான எதிர்கால தேவை அதிகரிப்பதன் மூலம் மன அழுத்த நிலைகள், மனநலப் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு, அன்றாட வாழ்வில் கவனம் தேவை, மேம்பட்ட கவனம் மற்றும் உற்பத்தித் தேவைகள், ஆன்மிகம் வளர்ச்சி அபிலாஷைகள், குழு நடைமுறைகள் மூலம் சமூகத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஒருங்கிணைத்தல் கல்வி அமைப்புகளுக்குத் தியானம் அவசியம். நவீன உலகில் தியானம் தேவையான ஒன்றாக காணப்படுகின்றது என்றால் பிழையாகாது.





இஸ்ரேல்

காசாவுக்கான நிவாரணங்கள்

# தடைப்படும் அபாயம்

காசாவுக்குள் செல்லும் நிவாரண உதவிகள் அனைத்தும் தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பலஸ்தீனம் மீது கடந்த ஒரு வருடகாலமாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 43 ஆயிரத்தை கடந்துள்ளது. மேலும், வீடுகளையும் உறவுகளையும் இழந்து அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளவர்கள் மீதும், இஸ்ரேல் தாக்குதல் நடத்துகிறது.

இந்நிலையில், உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் இன்றி ஊட்டச்சத்துக் குறைபாட்டால் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குக் கிடைக்கும் சொற்ப நிவாரண பொருட்களையும் தடுக்க இஸ்ரேல் பாராளுமன்றம் பிரேரணை ஒன்றுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

பலஸ்தீனிய அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பானது (UNRWA), இஸ்ரேலிலும் ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேமிலும் செயல்படத் தடை விதிக்கும் பிரேரணைக்கு, திங்கட்கிழமை(28), இஸ்ரேல் பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்தப் பிரேரணை நடைப்முறைபடுத்தப்பட்ட பின்னர் காசாவுக்குள் செல்லும் சொற்ப நிவாரண உதவிகள் அனைத்தும் தடைப்படும் சூழல் உருவாகும் என்று ஐ.நா. கவலை தெரியவிட்டுள்ளது.

இந்த பிரேரணை தாக்கல் செய்யப்பட்டது முதலே இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த அமெரிக்கா, தற்போது இஸ்ரேல் பாராளுமன்றம் இதற்கு ஒப்புதல் வழங்கியது குறித்து கடும் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

முன்னதாக ஐ.நா. பொதுச் செயலாளர் இஸ்ரேலுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டது. லெபனான்- இஸ்ரேல் எல்லையைப் பிரிக்கும் நீலக் கோட்டில் அமைத்துள்ள ஐ.நா. அமைதிப்படை தலைமையகம் மீது இஸ்ரேலிய படைகள் தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

அமெரிக்காவில்

# வாக்கு பெட்டிகளுக்கு தீ வைப்பு




அமெரிக்காவின் இருவேறு பகுதிகளில், நடைபெறவுள்ள அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்குகளுடன் கூடிய வாக்குப் பெட்டிகள், மர்ம நபர்களால் எரிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒரேகான் மாகாணத்தில் உள்ள போர்ட்லாண்ட் பகுதியில், 2 வாக்குப் பெட்டிகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து தலைநகர் வொஷிங்க்டன் மாகாணத்தில் உள்ள வான்கூவர் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குப் பெட்டிகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்த இரு சம்பவங்களிலும் தீயணைத்துப்புத்துறை துரிதமாக செயல்பட்டு தீயை அனைத்துள்ளது. இருப்பினும், உள்ளே இருந்த நூற்றுக்கணக்கான வாக்குச்சீட்டுகள் தீயில் எறிந்துள்ளதாகவும் இதனால் சொற்ப வாக்குச் சீட்டுகளை மட்டுமே சேதமின்றி மீட்க முடிந்ததாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


இதற்கிடையே செலுத்தப்பட்ட வாக்குகளை மீண்டும் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா

ரஷ்யாவுக்கு ஆதரவாக

# 10 ஆயிரம் வடகொரியா வீரர்கள் களமிறக்கம்

உக்ரைன் போருக்கு எதிராக, ரஷ்ய படைகளுக்கு ஆதரவாக வட கொரிய படைகளும் சண்டையிட உள்ளதாகவும் இதற்காக சுமார் 10 ஆயிரம் வீரர்களை ரஷ்யாவுக்கு அனுப்பியுள்ளது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.



இதுபற்றி அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் செய்தி தொடர்பாளர் சப்ரினா சிங் கூறுகையில்,

“அடுத்த சில வாரங்களுக்குள் உக்ரைனில் போர்ப் பயிற்சி மற்றும் போரில் ஈடுபடுவதற்காக வட கொரியா சுமார் 10,000 துருப்புக்களை ரஷ்யாவிற்கு அனுப்பியுள்ளது. அந்த வீரர்களில் சிலர் ஏற்கனவே உக்ரைனை நெருங்கி உள்ளனர். வட கொரியாவின் வீரர்கள் போர்க்களத்தில் பயன்படுத்தப்பட்டால், அவர்களும் தாக்குதல் இலக்குகளாக கருதப்படுவார்கள். ஆனால் அவர்களை போரில் பயன்படுத்துவது இந்தோ-பசிபிக் பாதுகாப்பிலும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று, எங்கள் இராணுவ அமைச்சர் லாயிட் ஆஸ்டின் ஏற்கனவே பகிரங்கமாக எச்சரித்துள்ளார்” என்றார்.

ரஷ்யா– உக்ரைன் போரை

# “இந்தியாவால் நிறுத்த முடியும்”



ரஷ்யா- உக்ரைன் தங்களது போரை நிறுத்த வேண்டும் என பல்வேறு நாடுகளும் வலியுறுத்தி வருகின்ற நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் ரஷ்ய போரை நிறுத்த உதவ முடியும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மீண்டும் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதங்களில் ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளுக்கும் சென்ற இந்திய பிரதமர் மோடி, போர் நிறுத்தம் குறித்து வலியுறுத்தினார்.

அண்மையில், ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டுக்கு சென்ற மோடி, “இந்த யுகம் போருக்கானது அல்ல என்றும் எந்த ஒரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்வு வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்நிலையில், தற்போது பேசியுள்ள உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, “இந்திய பிரதமர் நரேந்திர மோடி, உலகின் செல்வாக்குமிக்க தலைவராக மாறியுள்ளார். உக்ரைன் போரை நிறுத்த அவரால் உதவ முடியும். இதுதொடர்பாக இந்தியாவில் அமைதி பேச்சுவார்த்தை நடைபெற வாய்ப்பு இருக்கிறது” என்று தெரிவித்துள்ளார்.

# பலூன் டோரை வென்ற றொட்றி



உலகின் சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான விருதை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரான றொட்றி செவ்வாய்க்கிழமை (29) வென்றுள்ளார்.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டின் முன்களவீரரான வின்ஷியஸ் ஜூனியர், மத்தியகளவீரரான ஜூட் பெல்லிங்ஹாமைத் தாண்டியே இவ்விருதை ஸ்பெய்னின் றொட்றி வென்றுள்ளார்.

இதேவேளை, 21 வயதுக்குட்பட்ட சிறந்த வீரராக லா லிகா கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான லமீன் யமால் தெரிவானார். இந்நிலையில் ஆண்டின் சிறந்த கழகமாக றியல் மட்ரிட் தெரிவாகியதோடு, சிறந்த முகாமையாளராக மட்ரிடின் முகாமையாளர் கார்லோ அன்சிலோட்டி தெரிவானார்.

அத்துடன், சிறந்த கோல் காப்பாளராக ஆர்ஜென்டீனாவின் எமிலியானோ மார்டினெஸ் தெரிவாகியிருந்தார்.




# பலொட்டலியைக் கைச்சாத்திட்ட ஜெனோவா

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்னாள் முன்களவீரரான மரியோ பலொட்டலியைக் கைச்சாத்திட்டதாக இத்தாலிய சீரி ஏ கழகமான ஜெனோவா திங்கட்கிழமை (28) அறிவித்துள்ளது.

கடந்த பருவகாலம் முடிவைத் தொடர்ந்து கழகமெதுவும் இல்லாமல் 34 வயதான பலொட்டலி காணப்பட்டிருந்தார்.



# செல்சி செல்லும் டியஸ்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் பின்களவீரரான ருபென் டியஸை கழகத்திலிருந்து வெளியேற அடுத்தாண்டு சிற்றி அனுமதிக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், அவரைக் கைச்சாத்திட இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சி ஆர்வம் காட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதேவேளை 27 வயதான டியஸைக் கைச்சாத்திட ஜேர்மனிய புண்டெலிஸ்கா, ஸ்பானிய லா லிகா கழகங்களும் முயல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சிற்றியுடன் 2027ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தை டியஸ் கொண்டிருக்கிறாரென்பது குறிப்பிடத்தக்கது.



# முகாமையாளர் டென் ஹக்கை நீக்கிய யுனைட்டெட்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டானது முகாமையாளர் எரிக் டென் ஹக்கை நீக்கியுள்ளது.

இந்நிலையில், புதிய முகாமையாளரை யுனைட்டெட் தேடுகின்ற நிலையில் தற்காலிக அடிப்படையில் உதவிப் பயிற்சியாளர் ருட் வான் நிஸ்டெல்ரூய் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டென் ஹக்கைப் பிரதியிடுவதில் வான் நிஸ்டெல்ரூய் முன்னிலையில் உள்ளதுடன், அப்பட்டியலில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவின் முன்னாள் முகாமையாளர் ஸ்கெவி, போர்த்துக்கல் கழகமான ஸ்போர்டிங்கின் முகாமையாளரான ருபென் அமோரிம், பிறீமியர் லீக் கழகமான பிரென்ஃபோர்ட்டின் முகாமையாளரான தோமஸ் பிராங்க், பிறீமியர் லீக் கழகமான செல்சியின் முன்னாள் முகாமையாளரான கிரஹாம் பொட்டர், பிறீமியர் லீக் கழகமான இப்ஸ்விச் டௌணின் முகாமையாளரான கெய்ரான் மக்கென்னா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து

# ஓய்வு பெற்றார் வேட்



சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வை அவுஸ்திரேலியாவின் விக்கெட் காப்பாளர் மத்தியூ வேட் அறிவித்துள்ளதுடன், பாகிஸ்தானுக்கெதிரான இருபதுக்கு-20 தொடருக்கான அவுஸ்திரேலியாவின் பயிற்சியாளர் பதவியொன்றில் இணைந்துள்ளார்.

36 டெஸ்ட்களில் விளையாடிய 36 வயதான வேட் 1,613 ஓட்டங்களைப் பெற்றதுடன், 97 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 1,867 ஓட்டங்களைப் பெற்றதுடன், 92 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 1,202 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 30, ஒக்டோபர் 2024, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.